பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 11 சனிக்கிழமை 26.12.2020 கதிர் 51

இது ரகசியம் அல்ல!

நிழலின் அருமை வெயிலில் தெரியும் என்பார்கள். பல விடயங்களில் அதுதான் நிலைமை.

எங்களைப் போன்ற ஊடகவியலாளர்களின் பேனாக்களில் பல தடவைகள் நெருடப்பட்டாலும் – தொல்லைக்கு உட்படுத்தப்பட்டாலும் – அதனை பக்கம்02







## ‘அத்துமீறும் இந்திய மீனவரைப் படகுகளுடன் பிடித்து வாருங்கள்!’ வடமராட்சி மீனவருக்கு அனுமதி வழங்கினார் அமைச்சர் டக்ளஸ்

### வரும் பிரச்சினைகளைத் தான் பார்த்துக் கொள்கிறேன் என்றும் உத்தரவாதம்

யாழ்ப்பாணம், டிச.26

“அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பிற்குள் நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் இந்திய மீன்பிடிப் படகுகளை முடியுமானால் பிடித்து வந்து ஒப்படையுங்கள். அதனால் வருகின்ற பிரச்சினைகளை நான் பார்த்துக் கொள்கிறேன்” – எனக் கடற்றொழில் வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடமராட்சி மீனவர்களுக்கு வாக்குறுதி வழங்கியுள்ளார் என்ற செய்தி தமிழகத்தில் பரபரப்பாகப் பேசப்படுகின்றது. பக்கம் 02

## காங்கேசன்துறை துறைமுகம் இந்திய உதவியில் அபிவிருத்தி

### கப்பல், துறைமுக அமைச்சர் தகவல்

கொழும்பு, டிசெம்பர் 26

இந்தியாவுடன் சேர்ந்து காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய உத்தேசித்திருக்கிறோம். அப்பணி பூர்த்தியானதும் அப்பிரதேச இளைஞர், யுவதிகளுக்கு அங்கு வேலைவாய்ப்புகள் பெற்றுக் கொடுக்கப்படும்.

– இவ்வாறு துறைமுகங்கள், கப்பல்துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன இதனைத் தெரிவித்தார். பக்கம் 02

## கொரோனா சாவு 186

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

களுத்துறையைச் சேர்ந்த 71வயதான ஆண் ஒருவரே உயிரிழந்துள்ளார் என்று அரச தகவல் திணைக்களம் பக்கம் 02

## கொரோனாத் தொற்று 39,782 ஆக அதிகரிப்பு!

இலங்கையில் நேற்றும் 551 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இதுவரையில் 36 ஆயிரத்து 99 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

நாட்டில் மொத்தத் பக்கம் 02

### ஜனாஸா விவகாரத்தில்

## ராஜபக்ஷ அரசுக்கு எதிராக மைத்திரி ‘ரீம்’ போர்க்கொடி



கொரோனா வைரஸினால் உயிரிழக்கும் நபர்கள் புதைக்கப்படுவதற்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டுள்ள ராஜபக்ஷ அரசை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர கடுமையாக விமர்சித்துள்ளார். பக்கம் 02

## ஜனாஸா எரிப்புக்கு எதிராக பல இடங்களில் போராட்டம்!

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் இறப்பவர்களின் உடல்களை எரிக்கும் நடைமுறைக்கு எதிராக நாட்டின் பல பிரதேசங்களிலும் முஸ்லிம்கள் நேற்று கபன்சீலை போராட்டங்களை நடத்தினர்.

பள்ளிவாசல்களில் நேற்று ஜும்ஆ பக்கம் 02







### பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்

## பத்திரிகைச் சுதந்திரத்தை அடக்க முயற்சிக்காதீர்கள்!



### கோட்டா அரசிடம் சம்பந்தன் வலியுறுத்து

பத்திரிகை சுதந்திரத்தைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக்கொண்டு அடக்க முயற்சிக்க வேண்டாம் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசிடம் விநயமாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். 02

## கோட்டா அரசின் விரோத செயல்

### சஜித் கண்டனம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு, ஊடகங்களை அடக்க முயற்சிக்கின்றது. பக்கம் 02

## தமிழ் ஊடகங்களை ஒடுக்குவதில் ராஜபக்ஷ குடும்ப அரசு கங்கணம்!



### மனோ கடும் சீற்றம்

தமிழ் ஊடகங்களை அடக்குவதிலும் ஒடுக்குவதிலும் ராஜபக்ஷ குடும்ப அரசு கங்கணம் கட்டிச் செயற்படுகின்றது என்பதற்கு ‘உதயன்’ மீதான பக்கம் 02

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சிரித்துக் கொண்டு சமாளித்து, எதிர் நீச்சல் போடும், ஒரு கடும் உழைப்பாளி குறித்து இன்று குறிப்பிட விரும்புகிறேன்.

எங்கள் மத்தியில் அரசியல் செய்கின்ற பல வித்துவ அரசியல்வாதிகளில் இருந்து, பல அதிகாரிகள் வரை பலரும் இந்த மண் யுத்தத்தால் அதிர்ந்தபோது மண்ணில் – எமது மக்களோடு – நிற்காதவர்கள். யுத்த சமயத்தில் இந்த மண்ணோடு நின்று அரசியல் செய்யாமல் தமிழர் தேசத்துக்கு வெளியில் இருந்தபடி அறிக்கை – வாய் வீச்சு – அரசியல் செய்த பலர் இப்போது இங்கு அரசியல் மேதாவிகளாகவும் தலைவர்களாகவும் வந்து விட்டனர். மண்ணோடு நின்றவர்களைத் தேடித் தேடிப் புறக்கணித்து அரசியல் கட்சி நடத்துவதுதான் அந்தத் தலைவர்களின் ஒரே இலக்கு; ஒரே போக்கு.

அவர்களின்றும் வேறுபட்டவர் நான் இன்று குறிப்பிடும் அதிகாரி. யுத்தத்தின் இறுதிக் கணம் வரை, தங்கள் உயிரைத் துச்சமென மதித்தபடி, அந்தப் போரில் அவலப்பட்டுநின்ற மக்களுக்காக உழைத்த சில 'மனித தெய்வங்களில்' அவரும் ஒருவர்.

அந்த யுத்த காலத்தில் அவர்கள் ஆற்றிய அளப்பரும் பணி மதிப்பிட வார்த்தைகள் தாண்டியது. அப்பணிக்கான – அருஞ்சேவைக்கான – விருதாக கிட்டியதே யாழ்.போதனா ஆஸ்பத்திரியின் பணிப்பாளர் பதவி – அதுவும் ஓய்வுபெறும் வரையான நிரந்தரப் பதவி – என்பேன்.

ஆம். யாழ்.ஆஸ்பத்திரி பணிப்பாளர் மருத்துவர் எஸ்.சத்தியமூர்த்தி பற்றித்தான் குறிப்பிடுகிறேன். பல தடவைகள், இந்தப் பத்தியிலேயே அவரைக் காட்டமாக விமர்சித்துமிருக்கிறேன். இப்போது அவர் குறித்து நான் பிரஸ்தாபிப்பதற்குக் காரணம் உண்டு.

மிக நெருக்கடியான காலத்தில் யாழ். ஆஸ்பத்திரியைக் கட்டியாண்டவர் அவர். (நான் குறிப்பிடும் கட்டியாண்டவர்' என்ற பதத்தைக் கவனியுங்கள். அது கனகச்சிதமாக அவரது செயற்போக்குக்குப் பொருந்தும் சொற்பதம்.)

இப்போது தமது மேற்படிப்புக்காக – ஒரு வருட சேவை விடுப்பில் – அவர் லண்டன் செல்கின்றார்.

கடந்த மார்ச்சில் அவர் புறப்படத் தயாரான போதுதான் கொரோனாத் கொடூரன் என்ற அரக்கன் நாட்டில் கால் பதித்தான். அதனால் அவரது மேற்படிப்புத் திட்டம் தள்ளிப் போனது.

அனேகமாக புதுவருடம் பிறந்த கையோடு அவர் லண்டன் போக வேண்டியிருக்கும்.

இந்தத் தடவையும் அவர் புறப்படத் தயாராகும் சமயத்தில் லண்டனின் கொரோனா நெருக்கடி புது வடிவம் எடுத்துள்ளது. ஆனாலும் தடுப்பூசி எல்லாம் வந்து விட்டது. அவரது லண்டன் பயணம் தவிர்க்க முடியாததாக இருக்கும் என்றே தெரிகின்றது.

யாழ்.மருத்துவத் துறையில் – சுகாதார சேவையில் – அவரது பங்களிப்பின் தேவை அவர் இல்லாத சமயத்தில் நிச்சயம் உணரப்படும் என்று நினைக்கிறேன். அதனால்தான் நிழலின் அருமை எப்போது தெரியும் என்று ஆரம்பத்தில் குறிப்பிட்டேன்.

யாழ்.போதனா ஆஸ்பத்திரியில் இரு பிரதி மருத்துவப் பணிப்பாளர்கள் உள்ளனர். ஒருவர் – மருத்துவர் சிறிபவானந்தராஜா, மற்றவர் – மருத்துவர் சி.யமுனானந்தா.

இதில் முன்னவர் சிரேஷ்ட நிலையில் உள்ளவர். அதனால் மருத்துவர் சத்தியமூர்த்தி சேவை விடுப்பில் இருக்கும் ஒரு வருட காலமும் அவரே யாழ்.போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளராக பணியாற்றுவார் எனத் தெரிகின்றது.

சர்ச்சைகள், நெருக்கடிகள், அழுத்தங்கள் மத்தியில் பணியாற்றி வரும் மருத்துவர் சத்தியமூர்த்திக்கு, அடுத்த ஒரு வருட காலம் கற்றலுக்கான அழுத்தங்கள் இருந்தாலும், இங்குள்ள ஏனைய நெருக்கடிகள் இல்லாமல் இருப்பது கொஞ்சம் சுகமாகத்தான் இருக்கும். புதிய அனுபவங்கள், பட்டறிவுடன் 2022 யாழ்.ஆஸ்பத்திரி நிர்வாகத்தை அவர் மீளப் பொறுப்பேற்று மேலும் சாதனை படைப்பார் என எதிர்பார்ப்போம்.

★ ★ ★

நிர்வாக சேவை உயரதிகாரிகளின் வருடாந்த இடமாற்ற பட்டியல் வெளியே கசிந்து விட்டதாகத் தகவல். வடக்கில் மூன்றே மூன்று அதிகாரிகளுக்கு மட்டும்தான் இடம்மாற்றமாம். அதுவும் அவர்களாக விரும்பிக் கேட்ட மூவருக்கு மட்டும்தானாம்.

இதிலென்ன ஆச்சரியம், இதிலென்ன விடயம் இருக்கின்றது என்று கேட்கிறீர்களா? விவகாரம் உண்டு.

இங்கு ஓர் 'அமுல் பேபி' அரசியல்வாதி, 'அந்த அதிகாரியை மாற்று', 'இந்த அதிகாரியை வெளியேற்று' என்றெல்லாம் அரச மேலிடத்துக்குக் கடிதங்கள் மேல் கடிதங்கள் அனுப்பினார். முறைப்பாடுகள் செய்தார். புகார்கள் பறந்தன. எதுவும் பலனளிக்கவில்லை என்பதுதான் இப்போது வெளியாகியிருக்கும் உண்மை.

இதை அறிந்த பின்னராவது, அத்தகைய அரசியல் அழுத்தங்களுக்கு அடிபணிந்து, அந்த 'அமுல் பேபி' அரசியல்வாதி போன்றோருக்கு 'பந்தம்' பிடிக்கிறோம் என்ற பெயரில் தமது தகுதி நிலைக்குப் பொருந்தாத வேலைகளை எல்லாம் அவருக்காகச் செய்து கொண்டிருக்கும் அரச அதிகாரிகள் தங்களைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

இதையொட்டி இன்னொரு விவகாரமும் உண்டு.

இந்த 'அமுல் பேபி' அரசியல்வாதி அவரது கையாள்களான அதிகாரிகள் போன்ற பலரின் திருகுதாளங்கள், திருவிளையாடல்கள் அடங்கிய விவரத் திரட்டு, ஆதாரங்களுடன், ஜனாதிபதியின் மாகாணப் பிரதிநிதி கொழும்பு சென்றிருக்கின்றார் என்றும் –

நேற்று ஜனாதிபதியையும் அவரது அதிகாரிகளையும் நேரில் சந்தித்து இந்த விடயங்களை விலாவாரியாக அவர் ஒப்புவித்து முறைப்பாடு செய்திருக்கின்றார் என்றும் – உள்வீட்டுத் தகவல் ஒன்று தெரிவித்தது.

பத்தி வைத்தாயிற்று. எப்போது வெடிக்கும்? என்ன அதிர்வைத் தரும்?

பொறுத்திருந்து பார்ப்போம்...!

– மின்னல் –

## 'அத்துமீறும் இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பருத்தித்துறை மீனவர்கள் எதிர் கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட மீன்வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தமிழக மீனவர்கள் அத்துமீறி இலங்கைக் கரை ஓரங்களில் மீன்பிடிப்பதனை பருத்தித்துறை மீனவர்கள் முறைப்பாடாகத் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்புப் பற்றிய காணொலியே முழு விவரமாக இந்திய ஊடகங்களில் வெளிவந்துள்ளது.

தமிழக மீன்பிடி விசைப்படகுகள் இனியும் அத்துமீறி இலங்கைக் கரையோரத்திற்கு நெருக்கமாக வந்தால் அவற்றைப் பிடித்து வந்து என்னிடம் ஒப்படையுங்கள். வருகின்ற பிரச்சினைகளை நான் பார்த்துக்கொள்வேன் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உத்தரவாதம் வழங்குவது அந்தக் காணொலியில் இடம்பெற்றுள்ளது.

## ஜனாஸா எரிப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தொழுகையின் பின்னர் தமது பிரதேசங்களில் அவர்கள் இந்த ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

அந்தவகையில் கல்முனை பிரதான வீதியில் ஆர்ப்பட்டமொன்று நடத்தப்பட்டது. ஐக்கிய மக்கள் சக்தியின் கல்முனை தொகுதி அமைப்பாளர் சட்டத்தரணி எம்.எஸ் அப்துல் ரஸாக்கின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்ட நடைபெற்றது.

சுகாதார ஒழுங்கு விதிகளைப் பேணியே இந்த ஆர்ப்பட்டம் நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்தவர்கள் கைகளில் கபன்சீலை துணிகளை கட்டியிருந்ததுடன், இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்ய அனுமதியளிக்க வேண்டுமென்ற வாசகங்களை எழுதிய பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

இதேவேளை, நற்பிட்டிமுனை ஜும்ஆ பள்ளிவாசல் முன்றலிலும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

மௌலவி ஏ.எச்.எச்.எம் நௌபரின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் சி.எம்.முபீத் உட்பட இளைஞர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

புத்தளம் பாலாவி நகரிலும் எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஜும் ஆத் தொழுகையின் பின்னர் ஒன்றுகூடிய முஸ்லிம் மற்றும் கத்தோலிக்க மக்களால் புத்தளம் பாலாவி – கல்பிட்டி பிரதான வீதியிலுள்ள அன்னமாள் சிலைக் கோபுரத்துக்கு அருகில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முதலில் கபன் சீலையை கட்டிய பின்னர் பல்வேறு சுலோகங்களை ஏந்திய வாறு கோங்களை எழுப்பி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, நூற்றுக்கு மேற்பட்டவர்கள் சமூக இடைவெளி பேணி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

## காங்கேசன்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து காங்கேசன்துறைமுகத்தை நேரடியாகப் பார்வையிட்டு கொழும்பு திரும்பிய பின்னர் அங்கு வைத்து இந்தத் கருத்தை அவர் வெளியிட்டிருக்கின்றார்.

யாழ்ப்பாண நிகழ்வுகளில் பேசும்போது காங்கேசன்துறை துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படும் என்று மட்டுமே அவர் கூறியிருந்தார்.

கொழும்பில் பேசும்போதே, காங்கேசன்துறைத் துறைமுகத்தை இந்தியப் பங்களிப்புடன் அபிவிருத்தி செய்வது குறித்து அவர் பிரஸ்தாபித்திருக்கின்றார்.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்தல் என்ற பெயரில் இந்தியாவின் அதானி கம்பனிக்கு கோட்டாபய ராஜபக்ஷவின் அரசு வழங்கிவிட்டது என்ற குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில் அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன காங்கேசன்துறை துறைமுகம் இந்தியாவின் பங்களிப்புடன் அபிவிருத்தி செய்யப்படும் என்று கூறியிருப்பது முக்கிய கவனத்தைத் ஈர்த்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## கோட்டா அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அதன் ஒரு வெளிப்பாடே 'உதயன்' மீதான வழக்கு. இது இந்த அரசின் ஜனநாயக விரோத செயலாகும். பிரதான எதிர்க்கட்சி என்ற ரீதியில் இதை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ வெளியிட்டுள்ள கண்டனத்தில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 'உதயன்' பத்திரிகை மீது வழக்குத் தாக்கல் செய்தமைக்கு பொலிஸார் முன்வைத்துள்ள காரணம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. இது ஊடக சுதந்திரத்தை – கருத்துச் சுதந்திரத்தை மழுங்கடிக்கும் செயலாகும்.

யார் ஆட்சிப்பீடத்தில் இருந்தாலும் ஊடகங்களுக்கான சுதந்திரம் மிகவும் அவசியம். அந்தச் சுதந்திரத்தை எவரும் சட்டங்கள் கொண்டு அடக்க முடியாது.

கடந்த நல்லாட்சியில் ஊடகங்களின் கருத்துச் சுதந்திரம் பேணிப் பாதுகாக்கப்பட்டது. ஆனால், இந்த ஆட்சியில் ஊடகங்களின் கருத்துச் சுதந்திரம் திட்டமிட்டுப் பறிக்கும் செயல்கள் இடம்பெறுகின்றன. இதற்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ந்து குரல் கொடுக்கும் – என்றுள்ளது.

## கொரோனாத் தொற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தொற்றாளர்களின் எண்ணிக்கை 39 ஆயிரத்து 782 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 31 ஆயிரத்து 339 பேர் குணமடைந்துள்ளனர். 8 ஆயிரத்து 257 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## ராஜபக்ஷ அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இலங்கையில் பிறந்த ஒருவர் இலங்கையில் மரணிக்கும்போது அவரது உடலைப் புதைக்காமல் வேறு நாடுகளுக்கு அனுப்புவது நியாயமான காரியமல்ல எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முஸ்லிம் மக்களுக்கு அவர்களுடைய மார்க்க கிரமங்களுக்கு அமைய உடலைப் புதைக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

## கொரோனா சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அறிவித்துள்ளது.

புற்றுநோய், இரத்த அழுத்தம் மற்றும் கொரோனாத் தொற்றே உயிரிழப்புக்கான காரணம் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தாக்கத்தால் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 186 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 173 பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பத்திரிகைச் சுதந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த நாளன்று அவரது ஒளிப்படத்தையும் சொற்களையும் வெளியிட்டமை தொடர்பில் 'உதயன்' பத்திரிகை மீது யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் யாழ். பொலிஸாரால் பயங்கரவாதச் தடைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் வெளியிட்டுள்ள வன்மையான கண்டனத்திலேயே கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

மக்களின் குரலாக ஒலிப்பவையே பத்திரிகைகள். கருத்துத் சுதந்திரத்துடன் பத்திரிகைகள் வெளிவர வேண்டும். அந்தச் சுதந்திரத்தை சட்டங்கள் கொண்டு எவரும் அடக்க முடியாது.

'உதயன்' பத்திரிகையை பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக்கொண்டு அடக்க அரசு எடுத்துள்ள முயற்சியை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

சுமார் 35 ஆண்டுகளாக 'உதயன்' பத்திரிகை சேவையாற்றி வருகின்றது. உயிர்ப் பலிகளையும் சொத்திழப்புக்களையும் தாங்கிக்கொண்டு மக்களுக்கான மகத்தான சேவையில் 'உதயன்' உழைத்து வருகின்றது. இந்தநிலையில், இந்தப் பத்திரிகை மீது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை அரசின் திட்டமிட்ட சதி நடவடிக்கையாகும்.

இது பத்திரிகை சுதந்திரத்தை மீறிய ஒரு செயல். இது தவறான நடவடிக்கை. இது மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

'உதயன்' மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கை உடன் வாபஸ்பெறுமாறு அரசிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன் – என்று குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ் ஊடகங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வழக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

–இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் வெளியிட்டுள்ள கண்டனத்தில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: –

வரலாற்றில் தடம் பதித்தவர்களின் பிறந்த தினத்தையும், நினைவேந்தல் தினத்தையும் நினைவூட்டுவதும், அது தொடர்பான பதிவுகளை இடுவதும் – பிரசுரிப்பதும் ஊடகங்களின் பணி. இந்தநிலையில், கடந்த நவம்பர் 26ஆம் திகதி தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்த தினமன்று அது தொடர்பான செய்தியுடன் அவரின் புகைப்படத்தையும் வெளியிட்டதாக 'உதயன்' மீது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தெற்கில் சிங்கள மற்றும் ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகள் மற்றும் கட்டுரைகளில் பிரபாகரனின் படமும் வெளிவருகின்றது. இந்தநிலையில், 'உதயன்' பத்திரிகையைக் குறிவைத்தே இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம் பாய்ந்துள்ளது.

'உதயன்' பல்லாண்டு கால வரலாறைக்கொண்ட பத்திரிகை. பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வடக்கு, கிழக்கு, மலையகம் மற்றும் கொழும்பு வாழ் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும், முஸ்லிம் மக்களின் உரிமைகளுக்காகவும் அன்று தொடக்கம் குரல் கொடுத்து வரும் பத்திரிகை. எனவே, இந்தப் பத்திரிகை மீதான அரசின் அராஜகத்தை வன்மையாகக் கண்டிக்கின்றேன் – என்றுள்ளது.

### ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டோருக்காக

# உலக முஸ்லிம் லீக் வழங்கிய 50 லட்சம் டொலரும் எங்கே?

## சர்ச்சை கிளப்புகிறார் விஜேதாஸ ராஜபக்ஷ

ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக உலக முஸ்லிம் லீக் அமைப்பால் வழங்கப்பட்ட 50 லட்சம் டொலருக்கு என்ன நடந்தது என்பதை தேடிப்பார்க்கவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தரவுக்கு அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

2019 ஜுலை மாதம் உலக முஸ்லிம் லீக் அமைப்பின் சமாதான சம்மேளனம் மாநாடு கொழும்பு தாமரைத் தடாகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டிருந்த உலக முஸ்லிம் லீக் அமைப்பின் செயலாளர் கலாநிதி ஷேக் மொஹமட் பின் அப்துல் கரீம் அல் ஈஸா ஆகியோரால் 50 லட்சம் ரூபா கொடையாக வழங்கப்பட்டதாக ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

குறித்த நன்கொடையானது, ஈஸ்டர் தாக்குதலில் மரணித்தவர்களின் உறவினர்களுக்கு மற்றும் தாக்குதலில் காயமடைந்து அங்கவீனமுற்றிருப்பவர்களுக்கு வழங்குவதற்காக வழங்கப்பட்டதாகவே தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த மாநாட்டில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

என்றாலும் இவ்வாறு நன்கொடையாக வழங்கப்பட்ட சுமார் 92 கோடி ரூபா ஈஸ்டர் தாக்குதலில் மரணித்தவர்களின் உறவினர்களுக்கு மற்றும் தாக்குதலில் காயமடைந்து பாதிக்கப்பட்டவர்களின் நலநோம்புகளுக்காக கிடைக்கப்பெறவில்லை. அதனால் உலக முஸ்லிம் லீக் அமைப்பால் நன்கொடையாக வழங்கப்பட்ட



குறித்த நிதிக்கு என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்ளவேண்டி இருக்கின்றது. அதுதொடர்பில் உண்மை நிலையை வெளிப்படுத்தவேண்டும்.

அத்துடன் இந்த கடிதத்தின் பிரதிகள் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் கர்தினல் மெல்கம் ரஞ்சித் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாடகைக் காரைப் பெற்று மோசடிசெய்தவர் மாட்டினார்!

வாடகைக்கு பெற்றுக் கொண்ட கார்களை உரிமையாளர்களுக்கு ஒப்படைக்காமல் அவற்றை வேறு நபர்களிடம் அடகு வைத்து, மோசடியில் ஈடுபட்டு வந்த சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் பொலிஸ் அத்தியட்சகரின் காரியாலயத்துக்கு கடந்த திங்கட்கிழமை கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய அநுராதபுரம் குற்றப்புலனாய்வு பிரிவினர் அது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். அதற்கமைய கடந்த புதன்கிழமை அந்தச் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய சந்தேக நபர் சிலாபம் பகுதியைச் சேர்ந்த பிறிதொரு நபரிடம் 70 ஆயிரம் ரூபா தொகைக்கு மாதாந்த வாடகை அடிப்படையில் கார் ஒன்றை பெற்றுக் கொண்டுள்ளார். அந்த காரை உரிய காலத்தில் உரிமையாளரிடம் ஒப்படைக் காமல், மோசடி செய்து வந்தார் எனக் காரின் உரிமையாளர் முறைப்பாடு அளித்துள்ளார்.

இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த குற்றப் புலனாய்வு பிரிவினர் சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர். சந்தேக நபர் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொண்ட காரை அநுராதபுரம் – விஜயபுர பகுதியைச் சேர்ந்த நபரொருவரிடம் ஒரு லட்சம் ரூபாக்கு அடகு வைத்துள்ளார் எனவும் புலனாய்வு பிரிவினரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

# காதலியால் கொலை செய்யப்பட்ட காதலன்

ஹோமாகம பகுதியில் காதலர்களுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாட்டின் போது, காதலி தனது காதலனை கொலைசெய்துள்ளார் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஹோமாகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாகும்புர பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் கடந்த புதன்கிழமை இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஹோமாகம பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தெய்யந்தர பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

சந்தேக நபரான பெண்ணைக் கைது செய்துள்ள பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# திருகோணமலைத் துறைமுகத்தில் ரயில் பாதை அமைக்க ஆய்வுகள்!





திருகோணமலை துறைமுகத்தில் 1.5 கிலோமீற்றர் ரயில் பாதை அமைத்தல் மற்றும் திருகோணமலை துறைமுகத்தை மேம்படுத்துதல் தொடர்பான கலந்துரையாடலொன்று திருகோணமலை துறைமுகத்தில் இடம்பெற்றது.

துறைமுக மற்றும் கடற்படை விவகார அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன, துறைமுக மற்றும் கடற்படை அமைச்சின் செயலாளர், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கபில நுவன் மற்றும் பலர் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர்.

தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்த பயனுள்ள அபிவிருத்தித் திட்டத்தை அமைப்பதற்கான திட்டத்தில் திருகோணமலை மாவட்டத்திலுள்ள தொழிற்சாலைகளை நிர்மாணிக்கவும் புனரமைப்பதற்கும் ஒரு முன்னணி குழுவை நியமிக்க உத்தேசிக்கப்பட்டது.

இதன் மூலமாக திருகோணமலையில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், துறைமுக சுற்றுப்பயணத்தின் போது திருகோணமலை துறைமுகத்தின் பச்சை துறைமுகம் என்ற கருத்தை மேம்படுத்துவதற்காக திருகோணமலை துறைமுகத்தில் மரம் ஒன்றும் நடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# போலிக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி கனடா செல்ல முயன்ற பெண் கைது!

போலியான கனேடிய கடவுச் சீட்டைப் பயன்படுத்தி ஐக்கிய அரபு எமிரேட்ஸின் டுபாய் வழியாக கனடாவுக்கு தப்பிச் செல்ல முயன்ற குற்றச்சாட்டுக்காக யுவதியொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அந்த யுவதியை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் 22 வயதுடைய யாழ்ப்பாணம் பகுதியைச் சேர்ந்தவர் ஆவார்.

டுபாய் நோக்கி புறப்பட்ட எமிரேட்ஸ் விமான நிறுவனத்துக்கு சொந்தமான ஈ.கே.– 649 என்ற விமானத்தில் பயணிப்பதற்காகவே அவர் விமான நிலையத்துக்கு வருகை தந்துள்ளார்.

டிக்கெட் கவுண்டருக்கு (கருமபீடம்) அவர் வந்த போது அவரது கனேடிய கடவுச்சீட்டை சந்தேகித்த விமான அதிகாரிகள் மேலதிக விசாரணைக்காக ஆவணங்களை விமான நிலையத்தில் உள்ள குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

அதன் பின்னர் கனேடிய கடவுச்சீட்டு உள்ளிட்ட பிற ஆவணங்கள் தொழில்நுட்ப பரிசோதனைக்கு அதிகாரிகள் உட்படுத்தியதுடன், இது தொடர்பாக யுவதியிடம் கேள்விகளையும் எழுப்பியுள்ளனர்.

தொழில்நுட்ப ஆய்வுகளின் போது, யுவதி வழங்கிய கனேடிய கடவுச்சீட்டு வேறு ஒருவருக்கு சொந்தமானது என்பதும், கடவுச்சீட்டில் காணப்படும் யுவதியின் புகைப்படம் போலியானது என்பதும் தெரியவந்தது.

அதன் பின்னரே யுவதி குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டு, மேலதிக விசாரணை நடவடிக்கைகளுக்காக சி.ஐ.டி.க்கு ஒப்படைக்கப்பட்டார்.

## குருகுலம் தமிழ் மொழி ஒளிபரப்பு அட்டவணை

| 26.12.2020 | சனிக்கிழமை |
|---|---|
| 04.00 - 04.55 | தரம் - 12 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் |
| 05.00 - 05.55 | தரம் - 13 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் |
| 06.00 - 06.55 | தரம் - 12 உயிரியல் |
| 08.00 - 08.55 | தரம் - 10 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் |
| 09.00 - 09.55 | தரம் - 11 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் |
| 10.00 - 10.55 | தரம் - 10 தமிழ் |
| 11.00 - 11.55 | தரம் - 11 தமிழ் |
| 12.00 - 12.55 | தரம் - 12 இரசாயனவியல் |
| 13.00 - 13.55 | தரம் - 13 இரசாயனவியல் |
| 14.00 - 14.25 | தரம் - 06 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (1ஆம், 2ஆம்)<br>தரம் - 07 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (2ஆம், 4ஆம்) |
| 14.30 - 15.55 | தரம் - 08 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (1ஆம், 3ஆம்)<br>தரம் - 09 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (2ஆம், 4ஆம்) |
| 15.00 - 15.55 | தரம் - 12 தமிழ் |
| 16.00 - 16.55 | தரம் - 13 தமிழ் |
| 17.00 - 17.55 | தரம் - 13 உயிரியல் |
| 18.00 - 18.55 | தரம் - 08 ஆங்கிலம் (1ஆம், 3ஆம்)<br>தரம் - 09 ஆங்கிலம் (2ஆம், 4ஆம்) |
| 22.30 - 23.25 | தரம் - 12 பொறியியல் தொழிநுட்பம் |
| 23.30 - 24.30 | தரம் - 13 பொறியியல் தொழிநுட்பம் |

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இரண்டு கொடூரங்கள்!

'கெடுவான் கேடு நினைப்பான்' என்பார்கள்.

பேரினவாதத்தை நம்பி மட்டுமே அரசியல் செய்யும் ராஜபக்ஷக்களின் சிந்தனையும் அது போன்றதுதான் போலும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரும், பொதுத் தேர்தலுக்கும் முன்னரும் தென்னிலங்கையில் கற்றறிந்த மேல்மட்ட சமூகத்தினர் பலர் ராஜபக்ஷக்களோடு – குறிப்பாக கோட்டாபய ராஜபக்ஷவோடு – அணி சேர்ந்தனர். 'வியத்மக' , 'எளிய' என்ற பல்வேறு அமைப்புக்களை அவர்கள் தோற்றுவித்து ராஜபக்ஷக்களின் வெற்றிக்காகக் கடுமையாக உழைத்தனர். அது பழையகதை.

படித்தவர்கள் – கற்றறிந்தவர்கள் – என்பதால் தங்களின் அரசியல் செல்நெறி அல்லது போக்குக் குறித்து அச்சமயத்திலேயே அவர்கள் அவ்வப்போது தமக்குள் சுயபரிசோதனை செய்யத் தவறவில்லை என்றும் கூறப்படுகின்றது.

அச்சமயத்திலேயே, இனவாதத்தைக் கையில் எடுத்து, மேலாண்மைத் திமிர்ப் போக்கில் – இன்னும் விளக்கமாகச் சொல்வதானால் இனவெறி மேலாதிக்கப் பாதையில் – செயற்படுவது சரியா என்று ராஜபக்ஷக்களை ஆதரித்துச் செயற்பட முன்வந்த கற்றறிந்த மட்டத்தினர் தரப்பில் விரிவாக ஆராயப்பட்டதாம்.

எனினும், நல்லாட்சி அரசை வீழ்த்தி ஜனாதிபதிப் பதவியையும், ஆட்சியையும் கைப்பற்றுவதற்காக – அதுவரையில் அந்தப் போக்கில் செயற்படலாம், ஆட்சி மாற்றத்துக்கும், அதிகார மாற்றத்துக்கும் அதுதான் வழி என்றால் அதனைப் பின்பற்றலாம் என்றும் –

எனினும், ஆட்சியையும் அதிகாரத்தையும் பிடித்ததும் நாட்டின் தேசிய நலனுக்கும், ஒற்றுமைக்கும், இன அமைதிக்கும் வழி செய்யும் விதத்தில் சகல இனங்களையும், பிரதேசங்களையும் அரவணைத்துச் செல்லும் போக்கைப் பின்பற்ற வேண்டும் என அப்போது சமாதானம் கூறப்பட்டது என்றும் – தெரிவிக்கப்படுகின்றது. (ஐம்பதுகளில் பண்டாரநாயக்கா செயற்பட்டமை போல.)

இப்போது தேர்தல்கள் முடிந்து விட்டன. அதிகாரமும் கைமாறி விட்டது. ஆட்சியும் மாற்றப்பட்டு விட்டது. இலக்கும் எட்டப்பட்டு விட்டது.

ஆனால் பேரினவாதத்தில் ஊறிய ராஜபக்ஷக்களின் அதிகாரமையம் அதிலிருந்து மீளவேயிலலை. முழுதாக அதில் மூழ்கி விட்டது.

அதை ஒட்டி இரண்டு விடயங்கள் கட்டவிழ்ந்தன.

ஒன்று – தொடர்ந்தும் ராஜபக்ஷக்களின் பேரினவாத வெறிப் போக்கை ஏற்று அங்கீகரித்த மேல்தட்டு படித்த வர்க்கத்திற்கு கோட்டா நிர்வாகத்தில் உயர் பதவிகள் வழங்கப்பட்டன. அத்தரப்பு மேலும் வலிமை பெற, பேரினவாத செல்நெறியும் இன்னும் பலமும் தீவிரமும் பெற்றது.

மற்றது – தேர்தல் வெற்றிகளுக்குப் பின்னரும் பேரினவாத வெறிப் போக்கையே நிரந்தரக் கொள்கையாக மாற்றிக் கொண்ட கோட்டாபய நிர்வாகத்தின் மீது, அதன் காரணமாக அதிருப்தி கொண்ட பலர், கோட்டா அரசுடன் சேர்ந்து பயணிக்கும் நோக்கிலிருந்து மெல்ல நழுவிக் கொண்டுள்ளனர். அத்தரப்பினர் – காலம் காலமாக பொதுவெளியில் பகிரங்கமாக அரசியல் செய்து வந்தவர்கள் அல்லர். அதனால் கோட்டா அரசின் இந்த இனவெறிப் போக்குக்காக அவரது நிர்வாகத்துக்கு எதிராகப் பகிரங்கமாகக் கிளர்ந்தெழவோ, பிரசாரம் மற்றும் விமர்சனம் செய்யவோ அவர்கள் முற்படவில்லை. மாறாக, அமைதியாக விலகி, ஒதுங்கிக் கொண்டார்கள்.

ஜனாதிபதித் தேர்தலுக்கும் பொதுத் தேர்தலுக்கும் முன்னர் கோட்டாபய ராஜபக்ஷவின் 'வியத்மக' மற்றும் 'எளிய' அமைப்பில் இயங்கிய முன்னாள் செயற்பாட்டாளர்கள் பலர் திடீரென இப்போது அமைதியாகிய சூத்திரத்தின் பின்னால் பொதிந்து கிடக்கும் உண்மை இதுதான்.

'அரசன் எவ்வழி, மக்கள் அவ்வழி' என்பார்கள்.

அது போன்றுதான் 'அரசு எவ்வழி, அதிகாரிகள் அவ்வழி' என்ற நிலைமையும்.

கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் சடலங்கள் – ஜனாஸாக்கள் – புதைக்கப்படவே கூடாது, தகனம் செய்யப்பட்டேயாக வேண்டும் என்ற அரசின் பிடிவாதமான தீர்மானமும் கூட இத்தகைய பேரினவாத வெறியிலிருந்து பீறிட்டதுதான்.

அதற்கு விஞ்ஞான ரீதியாக – நிபுணத்துவத் தரத்திலான – சாயம் பூசப்படுவது அந்த இனவெறிப் போக்கை நியாயப்படுத்தும் அற்பத்தனம்.

கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களை புதைக்கலாம் என்று உலக சுகாதர ஸ்தாபனமே அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்தியா உட்பட உலக நாடுகள் எங்கும் – நிலத்தடி நீரை நம்பியிருக்கும் பல்வேறு நாடுகளிலும் கூட – கொரோனாத் தொற்றுடன் மரணித்தவர்கள் புதைக்கப்பட அனுமதிக்கப்படும் போது, இலங்கையில் மட்டும் இனவெறித் தீவிர தாண்டவத்தில் அது மறுக்கப்படுகின்றது.

உயிரிழந்தோரைப் புதைப்பதுதான் இஸ்லாமியர்களின் ஒரே வழக்கம் என்பதால், அவர்களின் மார்க்கத்துக்கு விரோதமான அநியாய செயலை விஞ்ஞானத்தின் பெயரில் ஒளிந்து கொண்டு அரங்கேற்றுகின்றது ராஜபக்ஷக்களின் அராஜக ஆட்சி.

இலங்கையில் உள்ள சிறுபான்மையினர்கள் – குறிப்பாகத் தமிழர்களும், முஸ்லிம்களும் – இப்போது இரண்டு கொடூரங்களை எதிர்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

ஒன்று – கொரோனா கொடூரம்; மற்றது – கோட்டா கொடூரம்.

சிறுபான்மையினராகப் பிறந்துவிட்ட நமது தலையெழுத்து இது!

## மேய்ச்சல் தரை விவகாரத்தால் முறிகண்டிப் பகுதியிலும் சிக்கல்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.26

மட்டக்களப்பு மாவட்டத்தில் பேரினவாத ஆக்கிரமிப்பால் மேய்ச்சல் தரைப் பிரச்சினை ஏற்பட்டது என்றால் வன்னிப் பிரதேசங்களில் வேறு வடிவில் மேய்ச்சல் தரைப் பிரச்சினை உருவாகியுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட கால் நடை வளர்ப்பாளர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் முறிகண்டி மற்றும் கொக்காவில் பகுதிகளில் தமது பட்டிகளை அமைத்து மேய்ச்சலில் ஈடுபடுவதனால் அப் பகுதி கால் நடை வளர்ப்பாளர்களும், விவசாயிகளும் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர் என முறிகண்டி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் குணரத்தினம் மணிவண்ணன் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மூன்று பெரும் பண்ணையாளர்கள் சுமார் ஆயிரத்து 500 மாடுகளை இப்பகுதியில் பட்டியிட்டு மேய்ச்சலில் ஈடுபடுகின்றனர். இது கடந்த ஆண்டு முதல் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது. இப் பகுதியில் பட்டி அடைக்கப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தடை விதித்துத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.


இத்தனைக்கும் மத்தியில் இன்றுவரை இந்த பட்டிகள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்படவில்லை. இதனால் இப் பகுதியில் உள்ள விவசாயிகளும் கால் நடை வளர்ப்போரும் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றோம். இருப்பினும் எவருமே கண்டு கொள்வது கிடையாது. ஏனெனில் இது தொடர்பில் பிரதேச செயலாளரிடம் முறையிட்டால் அவர் கமநல சேவைத் திணைக்களத்தை நாடுமாறு கூறுகின்றார். கமநல சேவைத் திணைக்களமோ பிரதேச சபையைக் கையைக் காண்பிக்கிறது.

பிரதேச சபையோ தம்மாலும் அவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை எனத் தெரிவித்து பொலிஸாரிடம் எழுத்தில் முறையிட்டு எமக்கும் தெரியப்படுத்தினர். பொலிஸார் ஒரு தடவை வந்து இங்கே பட்டி போட வேண்டாம், அகன்று செல்லுங்கள் எனக்கூறிவிட்டுச் சென்றனர். ஆனாலும் தீர்வு மட்டும் கிட்டவில்லை என கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் கால்நடை உரிமையாளர்களைத் தொடர்பு கொண்டு கேட்டபோது–

போரிற்கு முன்பு இரணைமடுக் குளத்தை அண்டிய பகுதியிலும் கனகாம்பிகை அம்மன் ஆலயத்திற்கு பின்புறமும் பட்டி அமைத்திருந்தோம். ஆனால் போரிற்கு பின்பு இப் பகுதிகளை இராணுவம் அபகரித்து முகாம் அமைத்து விட்டனர். இதனால் எமக்கு மாற்று இடமும் வழங்கப்படாது போக்கிடம் அற்ற நிலையில் மேய்ச்சல் தரையும் இன்றி அவலத் தின் மத்தியிலேயே இந்தத் தொழிலை மேற்கொள்ள வேண்டியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

## விலங்குக்கு வைத்த பொறியில் சிக்கி சிவில் பாதுகாப்புப் படை வீரர் சாவு!



வவுனியாவின் மகாகச்சக்கொடி – அலுத்வத்த பகுதியில் வியாழக்கிழமை காலை பாதுகாப்பற்றிருந்த மின் இணைப்பில் சிக்கி சிவில் பாதுகாப்புப் படை வீரர் உயிரிழந்துள்ளார் என மாமடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

விலங்குகளை வேட்டையாடுவதற்காக வைக்கப்பட்ட மின் இணைப்பில் சிக்கியே சிவில் பாதுகாப்புபடை வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் வவுனியா மகாகச்சகொடியவில் வசிக்கும் அச்சிந்த திஸாநாயக்க (வயது – 34) என்பவராவார்.

இறந்த சிவில் பாதுகாப்புப் படை வீரர் அலுத்வத்த காட்டு விலங்குகளைத் துரத்தச் சென்றிருந்தபோது விபத்து நடந்திருக்கலாமென பொலிஸார் தெரிவித்தனர்.

பாதுகாப்பற்ற மின் இணைப்புகளை அமைத்த நபர் யாரென இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை எனவும், இது தொடர்பான விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இறந்த சிவில் பாதுகாப்புப் படை வீரரின் உடல் திடீர்மரண விசாரணை அதிகாரியின் விசாரணையின் பின்னர் பிரேத பரிசோதனைக்காக வவுனியா பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படவுள்ளது.

மாமடுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இணையத்தில் அழகிகள் விற்பனை 9 பெண்கள் உட்பட 11 பேர் கைது!

இணையத்தின் ஊடாக அழகிகளை விற்ற கும்பலொன்றை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இதன் போது 9 பெண்கள் உட்பட 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கல்கிஸ்ஸ பகுதியில் இருமாடி சொகுசு வீடொன்றில் இந்த சட்டவிரோத செயற்பாடு இடம்பெறுவதாக குற்றத்தடுப்பு பிரிவுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதனடிப்படையில் கல்கிஸ்ஸ பொலிஸார் பல நாள்களாக அந்த வீடு மற்றும் அங்கு உள்ளவர்கள் தொடர்பாகக் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையில் கல்கிஸ்ஸ நீதிவான் நீதிமன்ற அனுமதியுடன் குறித்த வீடு சோதனைக்குட்படுத்தப்பட்டது. இதன் போதே 9 பெண்கள் உட்பட 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அங்கொட லொக்காவுக்கு சொந்தமான துப்பாக்கிகள், கைக்குண்டுகள் மீட்பு!

முல்லேரியா பகுதியில் பாதாளகுழு தலைவரான அங்கொட லொக்காவுக்கு சொந்தமான துப்பாக்கிகள், கைக்குண்டுகள் மற்றும் மகசின்கள் என்பன பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

முல்லேரியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செலிஹினி மாவத்தையில் கடந்த புதன்கிழமை பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

இதன் போது குறித்த பகுதியில் புதைக்கப்பட்டிருந்த , ஜேர்மன் நாட்டு துப்பாக்கி, துருக்கி நாட்டு துப்பாக்கி ஒன்றும், 30 ரவைகளை போட்டு வைக்க கூடிய மகசினொன்றும், 15 ரவைகளை வைக்கக்கூடிய மகசின்கள் மூன்றும் மற்றும் 14 ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சட்டவிரோத ஆயுதங்கள் இந்தியாவில் உயிரிழந்தார் எனக் கூறப்படும் பாதாள குழு தலைவரான அங்கொட லொக்காவுக்குச் சொந்தமானவை என்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் சந்தேகிக்கின்றனர்.

இந்த நவீன தரத்திலான துப்பாக்கிகள் எம் நாட்டு பாதுகாப்பு படையினரிடம் கூட இல்லை என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்த துப்பாக்கிகள் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# சடலங்கள் தகனம் தொடர்பாக சகலரோடும் ஆலோசிக்க வேண்டும்!

## ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்து



கொழும்பு, நவ.26

நாட்டில் வாழும் அனைத்து சமூகப்பிரிவினருடனும் கலந்துரையாடிய பின்னரே கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதா அல்லது தகனம் செய்வதா என்பது தொடர்பாக இறுதித் தீர்மானத்தை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியிருக்கிறார்.

ஒருவர் உயிரிழந்த பின்னர் அந்தச் சடலத்தை அடக்கம் செய்வதா? அல்லது தகனம் செய்வதா? – என்பது தொடர்பான தீர்மானம் அந்தந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களின் உரிமை எனும் அதேவேளை, விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் அரசாங்கம் அது தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் போது பௌத்த, இந்து, இஸ்லாமிய மற்றும் கத்தோலிக்க மதத்தலைவர்களுடன் கலந்துரையாடிய பின்னரே முடிவுக்கு வரவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

ஐக்கிய தேசியக்கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற மத்திய செயற்குழுக்கூட்டத்தில் கருத்து வெளியிடுகையிலேயே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:–

கத்தோலிக்கர்கள் உயிரிழந்த பின்னர் சடலங்களை அடக்கம் செய்கின்றார்கள். முஸ்லிம்களும் ஜனாஸாக்களை அடக்கம் செய்கின்றார்கள். அவர்கள் அதனை தத்தமது மதநம்பிக்கையின் அடிப்படையிலேயே மேற்கொள்கின்றார்கள் என்பதுடன் அதற்கு நாம் மதிப்பளிக்கின்றோம்.

ஐக்கிய தேசியக்கட்சி எப்போதும் இனங்களுக்கிடையிலான ஒற்றுமைக்கு முக்கியத்துவம் வழங்கிவந்திருக்கிறது. அதேவேளை பௌத்தர்களும், இந்துக்களும் கூடசிலவேளைகளில்சடலங்களைஅடக்கம்செய்வதுண்டு.

இது ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட அடிப்படை உரிமையாகும். எனவே கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடிக்கு மத்தியில், தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதா அல்லது தகனம் செய்வதா என்ற பிரச்சினை ஏற்படாத வகையில் தீர்வொன்றை வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

ஆகவே இந்த விவகாரத்தில் மக்களை இன மற்றும் மத ரீதியாகப் பாகுபடுத்தாமல், தற்போதைய சூழ்நிலை தொடர்பில் மதத்தலைவர்களுடன் கலந்துரையாடுவது அவசியமாகும்.

அதேபோன்று கொரியா, இந்தியா, ஜேர்மனி போன்ற நாடுகள் உலக சுகாதார ஸ்தாபனத்தின் வழிகாட்டல்களுக்கு அமைவாக செயற்பட்ட விதம் தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும். சுகாதாரப்பிரிவினர் கூறுகின்ற விடயங்களையும் நாம் ஏற்கின்றோம். ஆகவே இந்த விடயம் தொடர்பில் அனைத்துப் பிரிவினருடனும் கலந்துரையாடி சுமுகமான தீர்வொன்றை வழங்க வேண்டும் என்று அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். – என்றார்.

# மாடுகளைத் திருடி வெட்டிய ஐந்துபேர் வசமாக சிக்கினர்!

மாடுகளைத் திருடி இறைச்சிக்காக வெட்டிய ஐந்து பேரை ஏறாவூர்ப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இவர்களிடமிருந்து இரண்டு மாடுகள், ஓட்டோ மற்றும் இரண்டு மாடுகளின் வெட்டப்பட்ட இறைச்சி என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன என ஏறாவூர்ப் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி எச்.டபிள்யு.கே. ஜயந்த தெரிவித்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 2 மணியளவில் அவர்களைக் கைது செய்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மாடுகள் மயிலம்பாவெளி பிரதேசத்திலுள்ள நபர் ஒருவருக்குச் சொந்தமானவை. கடந்த மூன்று தினங்களில் அந்தப் பண்ணையாளரது பத்து மாடுகள் காணாமல் போயுள்ளன எனப் பொலிஸாரிடம் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த மாடுகள் ஐயங்கேணி பிரதேசத்தில் வெட்டப்பட்ட நிலையில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

வெட்டப்பட்ட மாடுகளில் ஒன்றின் வயிற்றில் கன்று காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர்களை நீதிமன்றில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக ஏறாவூர்ப்பொலிஸார் தெரிவித்தனர்.



# மதுபோதையில் வாகனம் ஓட்டிய 350 பேர் சிக்கினர்!

முகக் கவசம் அணியத் தவறியமை மற்றும் சுகாதார ஆலோசனைகளை பின்பற்றத் தவறியமை போன்ற குற்றச்சாட்டுக்காக கடந்த 24 மணிநேரத்தில் பல நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியில் 1,740 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதேவேளை மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டுக்காக பொலிஸ் போக்குவரத்து சிறப்பு நடவடிக்கையில் 350 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மதுபோதையில் வாகனத்தை செலுத்துதல் மற்றும் போக்குவரத்து விதிமுறைகளை மீறும் நபர்களை அடையாளம் காண நாடு முழுவதும் 9 ஆயிரம் பொலிஸ் பணியாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இது தொடர்பாக நாடு முழுவதும் 494 பொலிஸ் நிலையங்களுக்கு ஒரு லட்சத்து 30 ஆயிரம் மூச்சுப் பரிசோனைகருவிகள்வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மதுபோதையில் வாகனம் செலுத்தி குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால் அவர்களின் சாரதி அனுமதி உரிமத்தை இரத்து செய்வதுடன் 25 ஆயிரம் ரூபா அபராதமும், சிறைத் தண்டனையும் அனுபவிக்க நேரிடும் என்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.

# 10 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் இருவர் கைது!

பத்தரமுல்லை – கபுவாதெனிய பகுதியில் 10 லட்சம் ரூபாய் பெறுமதியான ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேக நபரொவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தலங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கபுவாதெனிய பகுதியைச் சேர்ந்த சந்தேக நபரிடமிருந்து 250 கிராம் ஐஸ் போதைப் பொருளும், 1800 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட விசாரணைகளுக்கமைய, அவரது வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 2 லட்சத்துக்கும் அதிகமான பணம், போதைப் பொருள்களின் நிறையை அளப்பதற்கு பயன்படுத்தப்படும் தராசு, ஐஸ் போதைப் பொருளைப் பயன்படுத்துவதற்காக உபயோகிக்கப்படும் உபகரணம் மற்றும் தொலைபேசி ஒன்றையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்

டுபாய் மற்றும் இந்தியாவுக்கு தப்பிச் சென்றுள்ளனர் எனக் கூறப்படும் பிரபல போதைப் பொருள் கடத்தல்காரர்களான வெல்லே சுரங்க மற்றும் சஞ்சு என்ற அழைக்கப்படும் நபர்களுக்குச் சொந்தமான போதைப்பொருள்களையே சந்தேக நபர் இவ்வாறு கொழும்பு உள்ளிட்ட மக்கள் நடமாட்டம் அதிகமான பகுதிகளில் விநியோகித்து வந்துள்ளார் எனப் பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. சந்தேக நபர் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# போலி நாணயத் தாள்கள் வைத்திருந்த மூவர் கைது!

பியகம பகுதியில் போலி நாணயத்தாள்களை தயாரித்து அவற்றை செல்லுபடியாகும் பணத்துடன் ஒன்று சேர்க்கும் மோசடியில் ஈடுபட்ட மூன்று நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித்றோஹண தெரிவித்தார்.

பியகம பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது போலி நாணயத்தாள்களை அச்சிட்ட பெண்ணொருவர் உட்பட மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது இவர்களிடமிருந்து 14 போலி ஆயிரம் ரூபா நாணயத்தாள்களும், 33 ஆயிரத்து 250 ரூபா செல்லுபடியாகும் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய அவர்கள் தற்காலிகமாக வசித்து வந்த வீடொன்றிலிருந்து 5 போலி ஆயிரம் ரூபா நாணயத்தாள்களும், 11 ஆயிரத்து 860 ரூபா செல்லுபடியாகும் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் தங்களிடமிருந்த போலி நாணயத்தாள்களை கொடுத்து, செல்லுபடியான பணத் தொகையை பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

கடுவெல மற்றும் சிலாபம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 26,42,48 வயதுடைய மூன்று பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் இந்த போலி நாணயத்தாள்களை அச்சிட பயன்படுத்திய அச்சு இயந்திரம் மற்றும் ஓட்டோ ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.


மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.

விலை - 150/=







கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

காலைக்கதிர் Kalaikkathir



# சுனாமி தாக்குதலின் 16 ஆம் ஆண்டு நினைவு

## ஆயிரக்கணக்கானோரை நாம் இன்று இழந்தோம்

● ப்ரியமதா பயஸ்

ஆசிய பிராந்திய கடலோர மக்களுக்கு 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் 26 ஆம் திகதி 'சுனாமி'யாக வந்த இயற்கை அனர்த்தம் அழிக்கமுடியாத கறைபடிந்த சுவட்டினைப் பதித்து விட்டு சென்றுவிட்டது .கடந்த 2004 ஆம் ஆண்டு 26 ஆம் திகதி நத்தார் பண்டிகையை கொண்டாடிய சந்தோசத்தில் திளைத்திருந்த மக்களை, துயரத்தின் எல்லைக்கு கொண்டுசெல்லும் நிலையில் அந்த கோர சம்பவம் நடந்தேறியது.

இந்து சமுத்திரத்தின் அருகில் உள்ள இந்தோனேசியாவின் தீவுக் கூட்டங்களில் ஒன்றான சுமாத்திரா தீவின் வடக்கே கடலுக்கு அடியில் காலை 6.58 மணிக்கு 9.0 ரிக்டர் அளவில் ஏற்பட்ட நில நடுக்கமானது சுனாமியைத் தோற்றுவித்தது.

சுனாமி பேரலைக்கு தாக்குப்பிடிக்க முடியாமல், இந்தோனேசியா, இலங்கை, இந்தியா, தாய்லாந்து, அந்தமான் தீவுகள் என 14 நாடுகளைச் சேர்ந்த இரண்டு லட்சத்து 50 ஆயிரத்து 676 உயிர்கள் காவு கொள்ளப்பட்டன.

அத்துடன் வீடுகள், கட்டடங்கள், வாகனங்கள், உயிரினங்கள் என கண்ணிமைக்கும் நொடியில் அனைத்தும் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டன.

இதில் இந்தோனேசியாவில் ஒரு இலட்சத்து 84 ஆயிரம் உயிர்களும் இலங்கையில் 35 ஆயிரத்து 322 பேரும் பலியாகினர்.

சுனாமியின் தாக்கத்தால் அதிகளவான அழிவுகளை எதிர்கொண்ட இரண்டாவது நாடு இலங்கைதான் . இங்கு சுமார் 35,322 பேரின் உயிர்கள் காவுகொள்ளப்பட்டமையோடு, சுமார் 516,150 பேர் வரை இடம்பெயர்ந்தனர்.

அத்துடன் சுமார் 119,562 கட்டடங்கள் முற்றாக சேதமடைந்தன. வடக்கு – கிழக்கு உள்ளிட்ட கடற்



கரையோரப் பிரதேசங்களே அதிகளவான அழிவுகளை சந்தித்தன.

இலங்கையின் கிழக்கு கல்முனைப் பகுதியை முதலில் தாக்கிய சுனாமி அலையினால் பெரிய நீலாவணையிலிருந்து பொத்துவில் வரையுள்ள நீண்ட கடற்கரைப் பகுதிகளே பெருமளவு பாதிப்பை எதிர்கொண்டன . திருக்கோவில், தம்பட்டை மற்றும் அக்பர் கிராமம் முழுமையாக அழிந்தன.

2004ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஆழிப்பேரலையினால் இலங்கையின் பாரிய மனித உயிர்சேதம் அம்பாறை மாவட்டத்திலேயே இடம்பெற்றிருக்கின்றது.

இங்கு சுமார் 9 ஆயிரத்திற்கும் அதிகமான மக்களை கடல் காவுகொண்டது. இதற்கு அடுத்ததாக சுமார் 4,500 பேர் அம்பாந்தோட்டையிலும். சுமார் 3,774 பேர் காலியிலும், மட்டக்களப்பில் 2,975 பேரும், முல்லைத்தீவில் 2,902 பேரும் பலியாகினர் . பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் கணக்கெடுப்புகளில் சற்று வித்தியாசம் ஏற்பட்டது.

அதேசமயம் கொழும்பிலிருந்து அதிகளவு பயணிகளை ஏற்றிக்கொண்டு அம்பாந்தோட்டை சென்ற ரயில், கடலலையின் சீற்றத்திற்கு இரையானது. விடுமுறையை எதிர்பார்த்து வீடு நோக்கிப் பயணித்தவர்களில் 1,700 இற்கும் மேற்பட்டவர்கள் மாண்டு போனார்கள். இது ஆசியாவின் ரயில் விபத்துக்களில் முக்கியமானதாகவும் உள்ளது.



இந்த இந்தியப் பெருங்கடல் நிலநடுக்கம் தாக்கியதில் தாய்லாந்து, இந்தியா, இலங்கை, மாலைத்தீவுகள், மலேசியா, மியான்மர், வங்காளதேசம், இந்தோனேசியா ஆகிய நாடுகளில் ஏற்பட்ட ஆழிப்பேரலையால் இறுதி கணக்கெடுப்பாக மூன்று லட்சம் பேர் வரை இறந்தனர்

தமிழகத்தின் கடலோர பகுதிகளை உருத்தெரியாமல் புரட்டிப் போட்டு ஆழிப்பேரலை ஊழித் தாண்டவமாடியது.

காலை 9.25 முதல் 9.27 – இந்தியாவில் தமிழகம், ஆந்திரா, கேரளா, புதுச்சேரிஆகிய பகுதிகளை 'சுனாமி' தாக்கியது அங்கே 12,000 பேர் பலியாகினர். இதில் 7,000 பேர் தமிழகத்தை சேர்ந்தவர்கள். கடலோர மாவட்டங்களான சென்னை, நாகை, கடலூர், கன்னியாகுமரி ஆகியன பெருமளவு பாதிக்கப்பட்டன. இதன் தாக்கம் இன்றும் மக்கள் மனதை விட்டு அகலவில்லை.

இலங்கையில் ஏற்பட்ட அழிவுகள் ஆசிய மக்கள் மனதில் பெரும் தாக்கத்தை தந்தன. விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் இந்த காலக்கடத்தில் ஒருவித மன ஒற்றுமையுடன் மக்கள் துயரங்களை தம் தோளில் தாங்கி கொண்டனர். அப்போதிருந்த ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையார் இயற்கை அனர்த்தத்தில் போரின்றிய தேற்றுதலுக்கு பெருமளவு இடம் கொடுத்தார் விடுதலைப்புலிகளும் சிங்கள மக்களுக்கான மீட்பு, நிவாரண பணிகளுக்கு தம் போராளிகளை அனுப்பி தமது மனிதாபிமானத்தை வெளிப்படுத்தினர். இலங்கை அரசும் உடனடியான அனர்த்த நிவாரண பணிகளை இலங்கையின் வடக்கு கிழக்குக்கு துரிதப்படுத்தியது.

அனர்த்தத்தில் போர் இன்றிய ஓர் மரண ஓலம் ஒலித்துக்கொண்டே இருந்தது – புலிகளின் மருத்துவ, நிர்வாக திட்டமிடல் சாதுரியம் சுனாமி பேரலையால் ஒருபடி மேலும் திறம்பட மிளிர்ந்ததை யாராலும் மறுக்க முடியாது. அவர்களின் திட்டமிடலையும் மருத்துவ முன்மொழிவுகளையும் இலங்கை அரசு கடைப்பிடிக்க தவறவில்லை.

இன்று காலை 9.25 மணியிலிருந்து 9.27 வரைக்கும் இரண்டு நிமிடங்கள மௌன அஞ்சலி செலுத்தி கண்ணிமைக்கும் நேரத்தில் எம்மைவிட்டு பிரிந்த பல்லாயிரக் கணக்கான உறவுகளை ஒருநிமிடம் நினைந்துருகிக் கொள்வோம். தேசிய பாதுகாப்பு தினமான இன்று 26 ஆம் திகதி சுனாமி நினைவுகளில் எம்மை ஒருகணம் ஈடுபடுத்துவோம்.

> **"இந்த இந்தியப் பெருங்கடல் நிலநடுக்கம் தாக்கியதில் தாய்லாந்து, இந்தியா, இலங்கை, மாலைத்தீவுகள், மலேசியா, மியான்மர், வங்காளதேசம், இந்தோனேசியா ஆகிய நாடுகளில் ஏற்பட்ட ஆழிப்பேரலையால் இறுதி கணக்கெடுப்பாக மூன்று லட்சம் பேர் வரை இறந்தனர்."**



# அத்தியாவசிய உணவுப் பொருள் விலை அடுத்த ஆண்டே கட்டுப்படுத்த முடியும்!



அமைச்சர் பந்துல தெரிவிப்பு

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தால் பூகோளமட்டத்தில்ஏற்பட்டுள்ளபொருளாதார நெருக்கடியில் இருந்து எம்மால் மாத்திரம் உடனடியாக மீள முடியாது. மக்களின் வாழ்க்கைச் செலவுகள் தற்போது அதிகரித்துள்ளமைக்கு பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

அத்தியாவசிய உணவு பொருள்களின் விலை 2021 ஆம் ஆண்டுக்கு பின்னரே கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படும் என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இலங்கை மன்ற கல்லூரியில்இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

கொவிட் - 19 வைரஸ் தாக்கம் முழு உலகிற்கும் சுகாதார மற்றும் பொருளாதார மட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. பல செல்வந்த நாடுகள் எம்மைக் காட்டிலும் பாதிக்கப்பட்டுள்ளன.

சர்வதேச மட்டத்தில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதன் தாக்கத்தில் இருந்து இலங்கை மாத்திரம் விடுபட முடியாது.

2 ஆம் உலக மகா யுத்தத்தால் இலங்கைக்கு நேரடி தாக்கம் ஏற்படவில்லை ஆனால் பொருளாதார மட்டத்தில் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தாலும் இந்நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது. ஆகவே சர்வதேச பொருளாதார நெருக்கடியில் இருந்து எம்மால் மாத்திரம் விடுபட முடியாது.

வாழ்க்கைச் செலவுகள் அதிகம் என எதிர்த்தரப்பினர் குற்றஞ்சாட்டுகிறார்கள். இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் விலை மாத்திரமே அதிகரிக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டுக்கு பின்னரே அத்தியாவசிய பொருள்களின் விலையைக் குறைக்க முடியும். தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலையை கட்டுப்படுத்த முடியாது.

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த எடுக்கும் தீர்மானங்கள் இனம், மதம் மற்றும் மொழி ஆகிய காரணிகளைக் கொண்டு எடுக்கவில்லை.

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழப்பவர்களின் உடலை தகனம் செய்யும் தீர்மானத்தை சுகாதார குழுவினரே எடுத்தனர். இந்த விடயத்தில் அரசாங்கத்துக்கு எவ்வித தொடர்பும் இல்லை. - என்றார்.

# கொரோனாத் தொற்றாளர் கொழும்பில் திடீர் வீழ்ச்சி!

அரச மருத்துவ சங்கம் அதிர்ச்சி



கொழும்பு மாநகரசபையை அண்மித்த பகுதிகளில் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் திடீரென தொற்றாளர்கள் எண்ணிக்கை குறைவடைந்தமைக்கான காரணம் என்ன என்பதை தொற்று நோயியல் பிரிவு தெளிவுபடுத்த வேண்டும்.

அவ்வாறில்லை என்றால் அங்குள்ள மக்கள் தாம் பாதுகாப்பாக இருப்பதாகக் கருதி அசமந்தமாகச் செயற்படக்கூடும். இது பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சங்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஹரித அலுத்கே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

பரவல் நிலைமையைப்புறந்தள்ளி எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்க முடியாது. இங்கிலாந்தில் தற்போது இனங்காணப்படும் தொற்றாளர்கள் புதிய வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் இலங்கையிலும் சரியான தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும். இலங்கையில் இந்த வைரஸ் பரவியுள்ளதா இல்லையா என்பது இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை. எவ்வாறிருப்பினும் இதன் மூலமும் நிச்சயம் அபாயம் காணப்படுகிறது.

இந்த அபாயத்திலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கான சிறந்த வழிமுறை சமூகத்திலுள்ள தொற்றாளர்களை துரிதமாக இனங்காண்பதாகும். இதற்கு பி.சி.ஆர். பரிசோதனைகளின் அளவை அதிகரிக்க வேண்டும்.

இதற்கு அடுத்த படியாக முன்னெடுக்க வேண்டிய நடைமுறை நகரங்களுக்கான போக்குவரத்து கட்டுப்பாடுகளை விதிப்பதாகும். இது தொடர்பில் உலகலாவிய ரீதியில் முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளை அவதானித்து உரிய நேரத்தில் சரியான தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

அடுத்தாக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை எந்த பகுதியில் அபாயம் காணப்படுகிறது என்பது மக்களுக்கு பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

செவ்வாயன்று கொழும்பில் 101 தொற்றாளர்களே இனங்காணப்பட்டுள்ளனர். இதற்கான காரணம் என்ன என்பதை தொற்று நோயியல் பிரிவு தெளிவுபடுத்த வேண்டும்.

அதிக அபாயமுடைய பகுதியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள கொழும்பு மாநகர சபையில் இவ்வாறு திடீர் மாற்றம் ஏற்படக் காரணம் என்ன? இதனை மக்களுக்கு தெளிவுபடுத்தாவிட்டால் அவர்கள் தாம் பாதுகாப்பாக இருப்பதாக எண்ணி அசமந்தப் போக்குடன் செயற்பட ஆரம்பித்துவிடுவார்கள். எனவே தான் உண்மையை வெளிப்படுத்துமாறு வலியுறுத்துகின்றோம்.

# மஹர சிறைச்சாலை துப்பாக்கிச் சூடு: பல பொய்கள் அம்பலத்துக்கு வந்தன

விஜித ஹேரத் தெரிவிப்பு



மஹர சிறைச்சாலையில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டால் 11 சிறைக் கைதிகள் உயிரிழந்துள்ளனர். உண்மையை மூடி மறைக்க அரசாங்கம் சொன்ன பொய்கள் விசாரணை அறிக்கைகளில் அம்பலமாகியுள்ளன என மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஜே.வி.பி. தலைமையகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் குறிப்பிடுகையில் -

மஹர சிறைச்சாலையில் 11 சிறைக் கைதிகள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். வத்தளை நீதிவான் நீதிமன்றத்தில் அது சம்பந்தமான வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது. கடந்த புதன்கிழமை மேலும் நான்கு பேரின் மரணத்துக்கான காரணம் துப்பாக்கியால் சுடப்பட்டமையே என வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கு முன்னரும் 4 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர் என உறுதிசெய்யப்பட்டது. 11 பேரில் 8 பேர் சுடப்பட்டமையாலேயே இறந்ததாக உறுதிசெய்யப்பட்டுள்ளது. சிறைச்சாலைகள் அமைச்சர் இந்த நிலைமையை மூடிமறைக்க துப்பாக்கிச் சூட்டினால் எவருமே இறக்கவில்லை எனக் கூறினார்.

ஆனால் விசாரணைக் குழு அறிக்கைகளில் துப்பாக்கிச் சூட்டால் சிறைக்கைதிகளின் மரணங்கள் சம்பவித்தமை உறுதியாகின்றது. அமைச்சர்களின் பொய் அம்பலமாகியது. நீதிமன்றத்தின் பிணையில் செல்ல விடுதலை செய்யப்படவிருந்த பெரும்பாலானோர் சிறைச்சாலையில் இருந்தார்கள்.

பிணை கிடைத்திருந்தவர்களை வெளியே விடுமாறே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சிறைக்கைதிகளின் முதலாவது கோரிக்கையாக அமைந்திருந்தது. இரண்டாவது - பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதாகும். மூன்றாவது - வேறு முகாம்களில் இருந்து கொரோனாவால் பீடிக்கப்பட்டவர்களை கொண்டுவர வேண்டாமென்பதுமேயாகும். மற்றது உணவு வழங்குவதை முறைப்படி மேற்கொள்ள வேண்டுமென்பதாகும். அப்படி கேட்டவர்களுக்குத்தான் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. - என்றார்.

# யாழில் விபச்சார விடுதி முற்றுகை!

ஐவர் கைது

யாழில் மிகவும் சூட்சுமமான முறையில் நடத்தப்பட்ட விபச்சார விடுதி முற்றுகையிடப்பட்டதுடன், இரு பெண்கள் உட்பட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் கோப்பாய் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பொற்பதி வீதியிலேயே விபச்சார விடுதி கடந்த (வியாழக்கிழமை) முற்றுகையிடப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி மற்றும் அவரது குழுவினர் தலைமையில் இந்த முற்றுகை நடவடிக்கை இடம் பெற்றுள்ளது.

மிகவும் சூட்சுமமான முறையில் நடத்திச் செல்லப்பட்ட இந்த விபச்சார விடுதியில் இரண்டு பெண்கள் மற்றும் மூன்று ஆண்கள் கைது செய்யப்பட்டமையுடன் அவர்கள் பயன்படுத்தும் வாகனமும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு கைதானவர்கள் புன்னாலைக்கட்டுவன் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் இவர்களை யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சுகாதாரத் தரப்பினர்கள் தெரிவித்தால் ஜனாஸாக்களை அடக்கம் செய்வோம்!

இப்படி கூறுகிறார் இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி



கொவிட்-19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழக்கும் முஸ்லிம் சமூகத்தினரது உடலை தகனம் செய்யும் விவகாரத்தை வைத்து எதிர்க்கட்சியினர் அரசியல் இலாபம் தேடிக் கொள்கிறார்கள்.

வைரஸ் தாக்கத்தால் உயிரிழப்பவர்களின் உடலை அடக்கம் செய்யலாம் என சுகாதாரத் தரப்பினர் குறிப்பிட்டால் அதனை செயற்படுத்த பின்வாங்கமாட்டோம் என ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி, தேசிய மருத்துவ மேம்பாடு இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்தார்.

கொழும்பில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழப்பவர்களின் உடலைத் தகனம் செய்யும் விவகாரம் தற்போது அரசியலாக்கப்பட்டுள்ளது.

வைரஸ் தாக்கத்தால் உயிரிழக்கும் முஸ்லிம் சமூகத்தினரது உடல் தகனம் செய்வதற்கு முஸ்லிம் சமூகத்தினர் ஆரம்பத்தில் இருந்து எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். இதனை பயன்படுத்தி எதிர்க்கட்சியினர் அரசியல் இலாபம் தேடிக் கொள்கிறார்கள்.

உயிரிழப்பவர்களின் உடலை அடக்கம் செய்யலாம் என்று சுகாதார குழு அறிவுறுத்தினால் அதனை முழுமையாக செயற்படுத்த தயாராக உள்ளோம். எம்மதத்தினரது உரிமைகளையும் முடக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது.

கொவிட்- 19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்தி தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்த வேண்டுமாயின் நாட்டு மக்கள் அனைவரும் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த ஆயுர்வேத மருத்துவ முறைமையில் தயாரிக்கப்பட்ட மருத்துவ முறைமை மற்றும் மருத்துவ பாணி தொடர்பாக விஞ்ஞான முறைமையில் பரிசோதனை முன்னெடுக்கப்படுகின்றன. தேசிய பாரம்பரிய மருத்துவ நடை முறைமைக்கு அரசாங்கம் முன்னுரிமை வழங்கும். - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# முதியோரையே அதிகம் கொரோனா பாதிக்கும்!

## அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தகவல்

வயது முதிர்ந்தோருக்கே கொரோனா வைரஸ் தொற்றால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் உயர்வாகக் காணப்படுகின்றன. இந்த அச்சுறுத்தலில் இருந்து அவர்களைப் பாதுகாப்பது அவசியம் என்றும் அதற்காக விசேட சமூகப் பாதுகாப்பு செயற்திட்டமொன்றை உருவாக்க வேண்டும் என்றும் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

மேலும், நாட்டின் மிகமுக்கியமான பிரிவினருக்கு சேவையாற்றுகின்ற கட்டமைப்புகளாக சமூகசேவைத் திணைக்களமும் முதியோர் செயலகமும் விளங்குகின்றன. கொரோனா வைரஸ் பரவலால் தற்போது நாடு அச்சுறுத்தலை எதிர்கொண்டிருக்கும் சூழ்நிலையில், வயது முதிர்ந்தோரே அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே அவர்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதுமாத்திரமன்றி விசேட சமூகப்பாதுகாப்புசெயற்திட்டமொன்றைஉருவாக்குவதும் அவசியமாகும் என இராஜாங்க அமைச்சர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

எனவே நத்தார் பண்டிகையை முன்னிட்டு நீண்ட விடுமுறை கிடைத்தாலும் மேல் மாகாணத்திலிருந்து வெளிப் பிரதேசங்களுக்குச் செல்வதை தவிர்த்துக் கொள்வதே சிறந்ததாகும்.

அபாயத்தை உணர்ந்து பொறுப்புணர்வுடன் செயற்படுமாறு மக்களைக் கேட்டுக் கொள்கின்றோம். கட்டுநாயக்க வர்த்தக நிலையம் மற்றும் ஆடை தொழிற்சாலைகள் என்பவற்றில் இவ்வாறு விடுமுறை வழங்கப்படக் கூடும். அவ்வாறு விடுமுறை கிடைக்கப் பெறுபவர்கள் தற்போது தங்கியிருக்கும் இடங்களிலேயே இருக்குமாறு வலியுறுத்துகின்றோம்.

இலங்கையிலுள்ள வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் ஊடாக ஒழுங்குபடுத்தப்படும் விமானங்கள் ஊடாக நாளாந்தம் இலங்கையர்கள் அழைத்து வரப்படுவார்கள். அவர்கள் நிச்சயம் அமைச்சிற்கு அறிவிக்க வேண்டும். மாறாக சரக்கு விமானங்கள் அவ்வாறு அறிவிக்க வேண்டிய தேவை கிடையாது. - என்றார்.

# தெற்கு மாகாணத்தில் 771 பேருக்கு கொரோனா மக்களை அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை!

தெற்கு மாகாணத்தில் இதுவரை 771 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அந்த மாகாணத்தின் கொரோனா தகவல் மையம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய காலி மாவட்டத்தில் 438 பேருக்கும், மாத்தறை மாவட்டத்தில் 266 பேருக்கும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 67 பேருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாகக் கொரோனா தகவல் மையத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சாமரா மகாகமகே தெரிவித்துள்ளவை வருமாறு :-

தெற்கு மாகாணத்தில் நேற்று மாத்திரம் 11 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

காலியில் 6 பேருக்கும் அம்பாந்தோட்டையில் 5 பேருக்கும் நேற்று கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. மாத்தறை மாவட்டத்தில் புதிய தொற்றாளர்கள் எவரும் அடையாளம் காணப்படவில்லை.

இதேவேளை தெற்கு மாகாணத்தில் 266 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். காலியில் இருந்து 167 பேரும், மாத்தறையில் இருந்து 72 பேரும் அம்பாந்தோட்டையைச் சேரந்த 27 பேரும் இவ்வாறு தொற்றில் இருந்து மீண்டுள்ளனர். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வருடாந்த இடமாற்றம் யாவும் பொலிஸாருக்கு ஒத்திவைப்பு!

## ஊடகப் பேச்சாளர் தகவல்

கொவிட் தொற்றுநோய் காரணமாக வருடாந்த பொலிஸ் இடமாற்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபரும் பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

கொவிட் -19 தொற்றுநோய் காரணமாக ஜனவரி 15 ஆம் திகதி திட்டமிடப்பட்டிருந்த பொலிஸ் அதிகாரிகளின் வருடாந்த இடமாற்றம் மார்ச் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள் ளார்.

பொலிஸ்மா அதிபரின் உத்தரவைத் தொடர்ந்தே இடமாற்றங்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

சமூக நல அறிவிப்பு



# 14 நாள்கள் தனிமைப்படுத்தல் ஏன் அவசியம்?

கொரோனா பாதிக்கப்பட்டவர்களை அரசு உடனடியாக மருத்துவமனைகளில் தனி வார்டுகளில் வைத்து கண்காணிப்பதற்கு முக்கியக் காரணம் நோயின் தீவிரம் அதிகம் என்பதாலேயே. இதை உணராமல் பலர் அலட்சியப்படுத்துவதே விபரீதமாகும்.

ஒரு கொரோனா நோயாளி எத்தனை பேருக்கு நோயைப் பரப்பியுள்ளார் என்பதை உடனடியாக பரிசோதித்து கண்டுபிடித்துவிட முடியாது அதனால் அவருடன் தொடர்பில் இருந்தவர்களை 14 நாள்கள் தனிமைப்படுத்தவில்லை என்றால், நோய் பரவலைக் கட்டுப்படுத்துவது மிகக் கடினம்.



நோய்க்கான மருந்து கண்டுபிடிக்கப்படாத நிலையில், நோய் தாக்கப்பட்டவர் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்படுவதன் மூலம் மற்றவர்களுக்கு பரவுவதை தடுக்க முடியும்.

சமூக அக்கறையுடன் - கொரோனா தொடர்பான விழிப்புணர்வுத் தகவல்களை உங்களுக்கு வழங்க இன்று அனுசரணை வழங்குகின்றனர்:-




# பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவை நீக்க ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்

## மக்கள் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பு

பொதுப்பயன்பாட்டுஆணைக்குழுவை நீக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது. மின்சாரத்துறையில் ஏற்பட்டுள்ள நட்டத்துக்கு கடந்த அரசாங்கம் மாத்திரம் பொறுப்பேற்க முடியாது. என மக்கள் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் அனுருத்த சோமவடு தெரிவித்தார்.

கொழும்பில்இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

பொதுபயன்பாட்டு ஆணைக்குழுவை நீக்க அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம் முற்றிலும் தவறானது. சுபீட்சமான எதிர்கால கொள்கை திட்டத்தில் நாட்டு மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

அரச நிர்வாகத்தில் ஊழல் மோசடிகள் இடம் பெறுவதான வழிமுறைகள் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளன. அரச நிர்வாக முறைமையில் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பொதுபயன்பாட்டு ஆணைக்குழுவை நீக்கினால் அதன் தாக்கம் நாட்டு மக்களை சேரும். மின்சாரத்துறை இதுவரை காலத்தில் மாத்திரம் 300 பில்லியன் ரூபா நட்டத்தை எதிர்கொண்டுள்ளது.

மின்சாரத்துறையின் வீழ்ச்சிக்கு கடந்த அரசாங்கம் மாத்திரம் பொறுப்புக் கூற வேண்டிய தேவை கிடையாது. இதுவரையில் ஆட்சியில் இருந்த அனைத்து அரசாங்கமும் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

பொதுபயன்பாட்டு ஆணைக்குழுவை நீக்க அரசாங்கம் குறிப்பிடும் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாது. கடந்த ஒரு வருடத்தில் மின்சாரத்துறை அபிவிருத்தி திட்டங்கள் திட்டமிட்ட வகையில் தாமதப்படுத்தப்பட்டுள்ளன என்று அரசாங்கம் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

கடந்த ஒரு வருடத்தில் மின்சாரத்துறை அபிவிருத்தி தொடர்பாகப் புதிய திட்டங்கள் ஏதும் வகுக்கப்படவில்லை. பொதுபயன்பாட்டு ஆணைக்குழுவை அரசியல் நோக்கங்களுக்காக அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ள முனைகிறது.

அரசியல் காரணிகளை அடிப்படையாக கொண்டு பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவை நீக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது. - என்றார்.

## சிறுமி மீது துஷ்பிரயோகம்: சந்தேகத்தில் ஐவர் கைது!

நிகவரெட்டிய பகுதியில் 15 வயதுடைய சிறுமியை துஷ்பிரயோகம் செய்ததனர் எனக் கூறப்படும் சந்தேக நபர்கள் ஐவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நிகவரெட்டிய பொலிஸ் நிலையத்தில் குறித்த சிறுமியின் தாயார் முறைப்பாடு அளித்துள்ளமையையடுத்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

சிறுமி பாடசாலைக்கு சென்றவுடன், சிறுமியின் பெற்றோர் தொழில் நிமித்தம் வெளியில் சென்றுள்ளனர். அவர்கள் வீட்டுக்கு வந்துள்ள போதிலும், பாடசாலைக்கு சென்ற சிறுமி நீண்ட நேரம் கடந்தும் வீட்டுக்கு வருகை தராதமையால் சந்தேகம் கொண்ட அந்தச் சிறுமியின் தாயார், அது தொடர்பில் நிக்கவரெட்டிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதன்போது விரைந்து செயற்பட்ட பொலிஸார் சிறுமியை மீட்டுள்ளனர். சிறுமியை துஷ்பிரயோகத்திற்குட்படுத்தியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் சிறுமியை சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சிறுமியின் உறவினர்கள் என்று கூறப்படும், அவரது வீட்டின் அயலில் வசித்து வரும் ஐந்து பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். 24 - 70 வயதுக்கு இடைப்பட்ட சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். மேற்படி சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.






## கல்முனையில் ஜனாஸா எரிப்புக்கு எதிராக வெள்ளைத் துணி கட்டிப் போராட்டங்கள்!

ஜனாஸா எரிப்புக்கு எதிராக, வெள்ளை துணி கட்டி கவனவீர்ப்பு போராட்டமொன்று கல்முனை பிரதான வீதியில் நேற்று (வெள்ளிக்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் கல்முனை தொகுதி அமைப்பாளர் சட்டத்தரணி எம்.எஸ்.அப்துல் ரஸாக்கின் ஏற்பாட்டில், கல்முனை பிரதான வீதியில் கொரோனா சுகாதார நடைமுறைக்கமைய இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் பல்வேறு சுலோகங்களை தாங்கி மேற்கொள்ளப்பட்டதுடன், பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தாத வகையில் நேர காலத்துடன் முடிவுறுத்தப்பட்டது.

இதில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் எம்.எச்.எம்.ஏ.மனாப் உள்ளிட்ட அரசியல், சமூக, பொதுநல, செயற்பாட்டாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்தப் போராட்டத்தில் ஜனாஸா எரிப்புக்கு எதிரான வாசகங்கள் மும்மொழிகளிலும் காட்சிப்படுத்தப்பட்டன. இனவாத தீ இன்றோடு அணையட்டும், விஞ்ஞானம் புதைப்பு இனவாதம் எரிப்பு, அரசே 20 நாள் குழந்தை எரிப்பில் இருந்து உன் அழிவு ஆரம்பம், உலக சுகாதார ஸ்தாபனத்தின் வழிகாட்டலை பின்பற்று, உலகமே புதைக்கிறது நாம் மட்டும் எரிக்க வேண்டுமா?, அரசே உனது கொடூர செயலை நிறுத்து - போன்ற வாசகங்கள் அவற்றில் குறிப்பிடப்பட்டிருந்தன.

## ‘செழிப்பான நாளை; வளமான தாய்நாடு’ என்ற கருத்தில் 73 ஆவது சுதந்திர தினம்!

கொழும்பு, டிசெ.26

2021 பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி இலங்கையின் 73ஆவது சுதந்திர தினத்தை கொண்டாட அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கொரோனா சுகாதார ஒழுங்கு விதிகளுக்கு அமைய இந்த முறை தேசிய சுதந்திர தின கொண்டாட்டத்தை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரச பாதுகாப்பு, உள்நாட்டு அலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஓய்வு பெற்ற மேஜர்ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற தேசிய சுதந்திர தின கொண்டாட்ட ஏற்பாடுகளின் முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தில் கலந்து கொண்டபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதன்படி ‘செழிப்பான நாளை வளமான தாய்நாடு’ என்ற தொனிப்பொருளில், தேசிய சுதந்திர தின வைபவத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் சுதந்திர சதுக்கத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

சுதந்திர தின கொண்டாட்ட பேரணியில் 4 ஆயிரத்து 325 இராணுவத்தினரும், 868 கடற்படையினரும், 945 வான் படையினரும், ஆயிரத்து 382 காவல்துறையினரும், 515 சிவில் பாதுகாப்பு படையினரும், மாணவ வீரர்கள் 355 பேரும் பங்கேற்கவுள்ளனர்.

## சிறைச்சாலை மோதல்கள், களேபரங்களை கட்டுப்படுத்துவதற்காக சிறப்புப் படையணி

### சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தகவல்

சிறைச்சாலைகளில் ஏற்படும் மோதல்களை கட்டுப்படுத்த விசேட பிரிவொன்றை ஸ்தாபிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரி வித்துள்ளார்.

ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பிரகாரம் இலங்கை இராணுவத்தில் 12 வருட கால சேவையை நிறைவு செய்து ஓய்வுபெற்ற 500 பேரை இந்த பிரிவில் இணைத்துக்கொள்ளவுள்ளதாக அவர் கூறினார்.

அண்மையில் மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட களேபர நிலைமையின் போது சிறைக் காவலர்களால் அதனைக் கட்டுப்படுத்த முடியாமல் போனது. அனர்த்த நிலையிலேயே அவ்வப்போது, சிறைகளில் ஏற்படும் மோதல் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு இத்தகைய விசேட படையணி ஒன்றின் தேவை உணரப்பட்டுள்ளதாகவும் அதன் பிரகாரம் இந்த சிறப்பு படைப் பிரிவு ஏற்படுத்தப் படவுள்ளதாகவும் அரச உயர் மட்டத் தகவல்கள் தெரிவித்தன.

## தடுப்பூசியைப் பெற இராஜதந்திர பேச்சு!

### சுசில் பிரேம ஜயந்த கருத்து



கொவிட் - 19 - தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள இராஜதந்திர மட்டத்தில் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வெகுவிரைவில் தடுப்பூசி பெற்றுக் கொள்ளப்படும் என தொலைநோக்கு கல்வி முறைமை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இலங்கை மன்ற கல்லூரியில்இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த அரசாங்கம் ஆரம்பத்தில் இருந்து பொறுப்புடன் செயற்பட்டுள்ளது. நாட்டு மக்கள் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நெருக்கடியான சூழ்நிலையை அரசால் மாத்திரம் தனித்து வெற்றிகொள்ள முடியாது.

தற்போது வாழ்க்கை செலவுகள் அதிகரித்துள்ளமைக்கு பல பொது காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. தேசிய மட்டத்தில் உற்பத்தி செய்யப்படாத பல பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

சர்வதேச மட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கொவிட் - 19 தடுப்பூசியை பெற்றுக் கொள்ள இராஜதந்திர மட்டத்தில் பேச்சு முன்னெடுக்கப்படுகிறது. வெகுவிரைவில் தடுப்பூசி பெற்றுக்கொள்ளப்படும்.

அனைத்து துறைகளிலும் அரசியல் தலையீடு உள்ளன என்று எதிர்தரப்பினர் முன்வைக்கும் குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது. அரச நிறுவனங்கள் கடந்த காலத்தை காட்டிலும் தற்போது சுயாதீனமாகச் செயற்படுகின்றன.

மஹர சிறைச்சாலை சம்பவம் தொடர்பில் முதற்கட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சம்பவத்தில் உயிரிழந்த கைதிகளில் நால்வர் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகியுள்ளனர் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டது. இந்த அறிக்கை நாட்டு மக்களுக்கு முழுமையாக பகிரங்கப்படுத்தப்பட்டது.

மஹர சிறைச்சாலை சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கை முழுமையாக மக்களுக்கு பகிரங்கப்படுத்தப்படும். அரசாங்கம் முறையாக செயற்படுகிறது. - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# முற்கூட்டியே வாக்களிக்கும் முறை வரும்!

## அரசு இணக்கமாம்

கொழும்பு,டிசெ.25

அத்தியாவசிய கடமைகளில் ஈடுபடுபவர்கள், மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நோயாளிகள் மற்றும் வெளிநாடுகளில் வேலை செய்பவர்கள் ஆகியோருக்கு தேர்தல் தினத்துக்கு முன்னரே வாக்களிக்க வசதியளிக்கும் ஒரு முறைமையை அறிமுகப்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக ஆராய்ந்து சட்டத்தை உருவாக்குவதற்கு நாடாளுமன்றத் தேர்வுக் குழுவை நியமிக்க பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார் என்று தேசிய தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவ தெரிவித்தார்.

ஜனவரி மாதத்தில் அந்தக் குழு பொறி முறையை வகுக்கத் தொடங்கும் என்று அவர் எதிர்பார்க்கிறார்.

பல நபர்கள் தங்கள் வேலையின் தன்மை அல்லது அவர்களின் சூழ்நிலை காரணமாக தேர்தல்களில் வாக்களிக்கச் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.

முன்னணி நிறுவனங்களின் ஊழியர்கள் மற்றும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்கள் போன்றோர் இப்போதைய நிலையில் அஞ்சல் வாக்களிப்புக்குத் தகுதியற்றவர்கள் என்று அவர் சுட்டிக் காட்டினார்.

எனவே தற்போதுள்ள வாக்களிப்பு பொறிமுறையில் பல மாற்றங்கள் செய்யப்படவுள்ளன எனவும், நாடாளுமன்றத் தேர்வுக்குழு மூலம் சட்டமியற்றும் செயல் முறை தொடங்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# 300 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட அரசியல் கைதி ரகுபதி சர்மாவுக்கும் தொற்று



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை இலக்கு வைத்து 1999 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் தொடர்பான வழக்கில் கைதுசெய்யப்பட்டு 300 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள அரசியல் கைதியான ரகுபதி சர்மா கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவருடன் கொழும்பு மகசின் சிறையில் தொற்றுக்குள்ளான அரசியல் கைதிகளின் எண்ணிக்கை 14ஆக அதிகரித்துள்ளது.

அரசியல் கைதிகள் உட்பட பல்வேறு சிறைகளில் உள்ள 65 வரையான தமிழ் கைதிகளுக்கும் இதுவரை கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, தொற்று உறுதியான அரசியல் கைதிகள் அனைவரும் கந்தக்காடு கொரோனாத் தொற்று சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர் என்று முதலில் தகவல்கள் வெளியாகியிருந்தபோதும் தற்போது வரை வெலிக்கடை சிறை வைத்தியசாலையிலேயே அவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மகஸின் சிறையில் மட்டும் 44 அரசியல் கைதிகள் உள்ள நிலையில் அவர்கள் அனைவரும் அச்சம் காரணமாக பி.சி.ஆர். பரிசோதனை செய்துகொள்ளப் பின்னடித்து வருகின்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அனைவருக்கும் பரிசோதைனை முன்னெடுக்கப்பட்டால் மேலும் தொற்று நோயாளர் தொகை அதிகரிக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழ் அரசியல் கைதிகள் பலர் நீண்ட காலம் சிறையில் உள்ள னர். அத்துடன் இவர்களில் பலர் நீண்ட கால நோய் நிலைகளுக்கு ஆட்பட்டவர்கள் என்பதால் தொற்று நோயால் இவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் எனக் குடும்பத்தினர் அச்சம் வெளியிட்டுள் ளனர்.

இவ்வாறான சந்தாப்பத்தில் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக அரசியல் கட்சிகள், சிவில் சமூகங்கள் மற்றும் மதத் தலைவர்கள் குரல் கொடுக்க வேண்டும் என அரசியல் கைதிகளின் விடுதலைக்கா கப் போராடி வரும் குரலற்றவர்களின் குரல் அமைப்பு மற்றும் அரசியல் கைதிகளின் குடும்பத்தினர் கோரிக்கை விடுத்துள்ள னர்.

குறைந்தது அவர்களை உடனடியாகப் பிணையிலாவது விடுவித்து அவர்களின் உயிரைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பில் குரல் அற்றவர்களின் குரல் அமைப்பினர் மதத் தலைவர்கள் மற்றும் அரசியல் தலைவர்களைச் சந்தித்துப் பேசி வருகின்றனர்.

# நாடு முழுவதும் ஒரு லட்சம் காணி விநியோகம் யாழில் மட்டுமே ஒரு லட்சம் விண்ணப்பங்கள்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.25

நாடு முழுவதும் ஒரு லட்சம் காணி விநியோகம் செய்யும் திட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மட்டும் ஒரு லட்சத்து 2 ஆயி ரத்து 500 பேர் அக்காணிகளைப் பெற விண்ணப்பித்துள்ளனர்.

நாடு முழுவதும் காணி விநியோகம் செய்வதற்காக கோரப்பட்ட விண்ணப்பத்தினை ஆராய்ந்து, அவர்களிற்கான நேர்முகத் தேர்வினை நடத்தி, பட்டியலைத் தயார் செய்து முன்னுரிமைப்படுத்துவது தொடர்பாக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே மேற்படி கருத்து தெரிவிக்கப் பட்டது.

இக் கலந்துரையாடலில் பல தீர்மானங்கள் மேற்கொள்ளப் பட்டன.

⁎ அவற்றிற்கு அமைய தற்போது விண்ணப்பித்தவர்களில் ஓர் ஏக்கருக்கும் குறைவாக விண்ணப்பித்தவர்களிற்கும், வதிவிட பிரதேச செயலாளர் பிரிவிற்குள் காணி கோரியவர்களிற்கும் முதலில் நேர்முகத் தேர்வினை நடாத்தி தகுதியானவர்களை இனம் கண்டு பட்டியிடுவதோடு அடுத்த கட்டமாக எஞ்சியவர்களிற்கான நேர்முகத் தேர்வினை நடாத்துதல்.

⁎ காணி கோரி விண்ணப்பித்தவர் வசிக்கும் பிரதேச செயலாளர் பிரிவிலேயே நேர்முகத் தேர்வினை நடத்துவதன் மூலமே விண்ணப்பதாரிக்கு வேறு நிலம், முயற்சி நிஜமை தொடர்பான விவரங்களை உறுதிப்படுத்த முடியும் என்பதனால் வசிக்கும் பிரதேச செயலகத்திலேயே நேர்முகத் தேர்வினை நடாத்துதல்.

⁎ ஒரே குடும்பத்தில் எத்தனை பேர் விண்ணப்பித்திருப்பினும் முதல் கட்டமாக ஒருவருக்கு மட்டுமே சிபார்சு செய்தல்.

- போன்ற தீர்மானங்கள் மாவட்டச் செயலாளர் தலைமையில் எட்டப்பட்டுள்ளன.

இக் கலந்துரையாடலில், காணி ஆணையாளர், உள்ளூராட்சி ஆணையாளர், தெங்கு அபிவிருத்திச் சபை எனப் பல திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

நாடு முழுவதும் வருடாந்தம் சராசரியாக இருபதாயிரம் பேருக்கு என்ற அடிப் படையில் அடுத்த ஐந்தாண்டுகளில் ஒரு லட்சம் பேருக்கு இவ்வாறு காணிகள் பிரித்து வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

# அமைச்சர்களுக்கும் பொதுமக்களுக்கும் கொரோனாச் சட்டம் வேறுபடுகின்றதா?

## இராதாகிருஷ்ணன எம்.பி. கேள்வி

'ஒரே நாடு - ஒரே சட்டம்' எங்கே?அதனை அமுல்படுத்த அதிகாரிகள் விரும்பவில்லையா? கொரோனா சட்டம் அமைச்சர்களுக்கும் பொதுமக்களுக்கும் வேறுபடுகின்றதா?

- இவ்வாறு நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஒரே நாடு ஒரே சட்டம் என்ற ஜனாதிபதியின் கோட்பாடு வெறும் வார்த்தைகளுக்கு மட்டுமே கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அது நடைமுறையில் இல்லை. கொரோனாச் சட்டம் அமைச்சர்களுக்கு ஒரு விதமாகவும் சாதாரண பொது மக்களுக்கு வேறு விதமாகவும் நடைமுறைபடுத்தப்படுகின்றது.



ஆனால் ஜனாதிபதியின் எதிர்பார்ப்பு அனைவருக்கும் சட்டம் பொதுவானதாக இருக்க வேண்டும் என்பதே என அவர் மேலும் தெரிவித்தார்.

# வெள்ளவத்தையில் வியாழன் 48 கொரோனாத் தொற்றாளர்!

வெள்ளவத்தையிலும் வெல்லம்பிட்டியிலும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துள்ளது.

அதன்படி கொழும்பில் கடந்த வியாழன் அடையாளம் காணப்பட்ட 245 நோயாளர்களில் 48 பேர் வெள்ளவத்தையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேநேரம் 42 பேர் வெல்லம்பிட்டியிலிருந்தும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இலங்கையில் வியாழன் 592 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதாக கொவிட்-19 தடுப்பிற்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

அவர்களில் 245 பேர் கொழும்பு மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், களுத்துறை மாவட்டத்தில் 140 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, கொவிட் -19 இரண்டாவது அலையின்போது களுத்துறை மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 84 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் கம்பஹா மாவட்டத்தில் 66 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதில் 15 பேர் நீர் கொழும்பு சிறைச்சாலையைச் சேர்ந்தவர்கள்.

இரத்தினபுரி மாவட்டத்தில் 17 பேர், மாத்தளை மாவட்டத்தில் 16 பேர், குருணாகல் மாவட்டத்தில் 14 பேர் மற்றும் காலி மாவட்டத்தில் 13 பேர்; அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கேகாலை, கண்டி, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் தலா 12 பேர் என்ற அடிப்படையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 9 பேர், மாத்தறை மாவட்டத்தில் 7 பேர், நுவரெலியா மாவட்டத்தில் 6 பேர், அம்பாறை மாவட்டத்தில் 4 பேர், திருகோணமலை மாவட்டத்தில் 4 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும் அம்பாந்தோட்டை, அனுராதபுரம் மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் தலா 3 பேர் என்ற அடிப்படையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# மருதனார்மடம் கொத்தணியில் மற்றொரு வியாபாரிக்குத் தொற்று

யாழ்.மருனார்மடம் சந்தையில் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்ற - உடுவிலைச் சேர்ந்த - மற்றொருவருக்கு இன்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வர் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக மருத் துவபீட ஆய்வுகூடத்தில் 124 பேருக்கு இன்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளானவர் மருதனார் மடம் சந்தையில் வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் உடுவிலைச் சேர்ந்தராவார். 14 நாள்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்குத் தொற்று அடையாளம் காணப்படவில்லை. தனிமைப்படுத்தல் நிறைவு பெறும் போது மேற்கொள்ளப்படும் இரண்டாம் கட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே அவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை யாழ். போதனா வைத்தியசாலையில் இன்று பி.சி.ஆர். பரிசோதனைகள் இடம்பெறவில்லை என்றும் தெரிவித்தார்.

## மீசாலை புத்தூர் சந்தியில் ஒருவர் குத்திப் படுகொலை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,டிச.25

யாழ்ப்பாணம் மீசாலை புத்தூர் சந் திக்கு அண்மையாக குடும்பஸ்தர் ஒருவர் கத்திக் குத்துக்கு இலக்கான நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான ஐயாத்துரை மோகனதாஸ் (47 வயது) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.



நேற்று முற்பகல் 11 மணியளவில் அவரது வீட்டுக்கு அண்மையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டிலிருந்து மீசாலைக்கு துவிச்சக்கர வண்டியில் புறப்பட்ட அவரை இனந்தெரியாத ஒருவர் வழிமறித்து கையிலும் நெஞ்சுப் பகுதியிலும் கத்தியால் குத்தி விட்டுத் தப்பித்துள்ளார்.

குருதிவெள்ளத்தில் வீதியில் கிடந்தவரை சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று அனுமதித்த போதும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார் என மருத்துவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. சடலம் சாவகச்சேரி வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

# மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல் யாழில்



(எஸ்.நிதர்ன்)

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் 15 ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

கட்சியின் பொதுச்செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஜோசப் பரராஜசிங்கத்தின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்தார்.

அதனைத்தொடர்ந்து கட்சியின் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் என நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் மலரஞ்சலி செலுத்தினர்.

# பெரியகல்லாறை அச்சுறுத்தும் கொரோனா: ஒரே குடும்பத்தில் நால்வருக்கு தொற்று!

மட்டக்களப்பு-களுவாஞ்சிக்குடி பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பெரியகல்லாறு பகுதியில் ஒரே குடும்பத்தினை சேர்ந்த மேலும் நான்கு பேர், கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட் டுள்ளனர் என சுகாதார பிரிவினர் தெரிவித்தனர்.

இதனடிப்படையில் பெரியகல்லாறில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 11 ஆக அதிகரித்துள்ளதாகவும் சுகாதார பிரிவினர் தெரிவித்தனர்.

கடந்த 22ஆம் திகதி, செட்டிபாளையத்தில் இடம்பெற்ற விபத்தைத் தொடர்ந்து அதில் பயணம் செய்த இருவர் கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்ட நிலையில், அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர்.

குறித்த தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள் தனிமைப் படுத்தப்பட்டு, மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் சோதனையில் இருவர் அடையாளப்படுத்தப்பட்டனர்.

இந்த நிலையில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளவர்களைத் தொடர்ச்சியாக அன்டிஜன் சோதனைக்குட்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் கடந்த (வியாழக்கிழமை) பெரியகல்லாறு பகுதியில் 27பேர் அன்டிஜன் சோதனைக்குட்படுத்தப்பட்ட நிலையில் நான்கு பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர் எனவும், நான்கு பேரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் முன்னர் அடையாளம் காணப்பட்டவர்களின் நெருங்கிய உறவினர்கள் எனவும் சுகாதார பிரிவினர் தெரிவித்தனர்.

இதேநேரம் பெரியகல்லாறு கலைமகள் வீதி தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டு, அப்பகுதிக்குள் நுழைவதும் வெளியேறுவதும் தடை செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் பெரியகல்லாறு பகுதியில் பொதுமக்கள் தேவையற்ற வகையிலான நடமாட்டங்களைக் குறைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரியகல்லாறிலுள்ள பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளமையுடன் மக்கள் நடமாட்டமும் குறைந்துள்ளது.

# வெளிநாடுகளில் சிக்கிய 599 பேர் நாடு திரும்பினர்!

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கி தவித்த 599 இலங்கையர்கள், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

கடந்த 24 மணி நேரத்தில் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இருந்து 390 இலங்கைகளும் மெல்போர்னில் இருந்து 120 பேரும் ஆஸ்ரேலியாவின் சிட்னியில் இருந்து 69 பேரும் 6 பயணிகள் விமானத்தின் ஊடாக நாட்டை வந்தடைந்துள்ளனர்.

இவ்வாறு வருகை தந்தவர்களின் பொருள்கள் விமான நிலையத்தில் வைத்தே கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, தொற்று நீக்கம் செய்யப்பட்டுள்ளன.

அதனைத்தொடர்ந்து நாட்டை வந்தடைந்த அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ரஷ்யத் தயாரிப்பு கொரோனாத் தடுப்பூசிகளை இலங்கைக்குப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை

### இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

ரஷ்யா தயாரித்துள்ள கொரோனா வைரஸ் தடுப்பூசியை இலங்கைக்கு கொண்டு வருவதற்கான ஆரம்பக்கட்ட முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன என இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் உதவியுடன் இதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார். ரஷ்யத் தடுப்பூசி செலவு குறைந்தது என்றும் அதனை சேமிப்பது சுலபம் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ரஷ்யத் தூதுவருடன் பேச்சுகளை மேற்கொண்டுள்ளார்கள் எனத் தெரிவித்துள்ள இராஜாங்க அசைச்சர், ஸ்புட்னிக்கின் மூன்று மருந்துகளை இலங்கைக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மேற்கொண்டுள்ளதாக வும் தெரிவித்துள்ளார்.

தடுப்பூசிகள் தொடர்பில் பேராசிரியர் லமாவன்ச ரஷ்ய அதிகாரிகளுடன் பேச்சுகளை மேற்கொண்டுள்ளார் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# 3,611 ஆக உயர்ந்தது ‘சிறைக் கொத்தணி’

### மகசின் சிறையில் அதிக தொற்றாளர்கள்

சிறைச்சாலைகளில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 611 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று புதிய நோயாளர்களாக 11 பேர் அடையாளம் காணப்பட்டதையடுத்து இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது எனச் சிறைச்சாலைகள் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்த மொத்தத் தொற்றாளர்களில் மகசின் சிறைச்சாலையிலேயே அதிகளவான கொரோனா நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். மகசின் சிறைச்சாலையில் இதுவரை 824 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வெலிக்கடை சிறைச்சாலையில் 813 பேருக்கும், மஹர சிறைச்சாலையில் 745 பேருக்கும், கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் 390 பேருக்கும், நீர்கொழும்பு சிறைச்சாலையில் 58 பேருக்கும் கொரோனா தொற்று உறுதி இதுவரை செய்யப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் சிறைச்சாலைகளில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளவர்களில் இதுவரை 2 ஆயிரத்து 857 பேர் குணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாஸா எரிப்புக்கு எதிராக யாழில் நேற்று கவனவீர்ப்பு!

### மக்கள் முன்னணி பங்கேற்பு

(ந.லோகதயாளன்)

இலங்கையில் முஸ்லிம் ஜனாஸாக்கள் வல்வந்தமாக எரிக்கப்படுகின்றமையைக் கண்டித்து யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்களினால் சோனகதெரு ஐந்து சந்திப் பகுதியில் நேற்று கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் கே.சுகாஷ்,



யாழ்ப்பாணம் பள்ளிவாசல் நிர்வாகிகள், உலமாக்கள், அரசியல் பிரதிநிதிகள், முஸ்லிம் வர்த்தகர்கள், யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கவனவீர்ப்பில் கலந்து கொண்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் கே.சுகாஷ் ஆகியோர் முஸ்லிம்களின் நியாயமான கோரிக் கைக்கு தமிழ் மக்களின் ஆதரவை உறுதியாகவும், வெளிப்படையாகவும் தெரிவித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டிருந்தனர். மேலும் யாழ்ப்பாணம் முஸ் லிம்கள் சார்பாக மௌலவி எம்.ஏ.பைசல் (மதனி) அவர்கள் கவனவீர்ப்பின் முக்கிய நோக்கம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். கொவிட் வைரஸ் தாக்கத்தை கருத்திற்கொண்டு சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்பட்டு, முகக்கவசம் அணிந்து, சமூக இடைவெளியுடன் குறித்த கவன யீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# திடீர் சுற்றிவளைப்பு: யாழில் 36 பேர் கைது

யாழ். மாவட்ட விசேட குற்றத் தடுப்புப் பிரிவினரால் கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு முன்னெடுக்கப்பட்ட 4 மணிநேர சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 36 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன் 25.5 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கிறிஸ்மஸ் மற்றும் பண்டிகை தினத்தை முன்னிட்டு 24ஆம், 25ஆம் திகதிகளில் யாழ். மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவினரால் விசேட தடுப்பு காவல் மற்றும் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பண்டிகை நாள்களில் இடம்பெறுகின்ற குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்குடன் யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் வழிகாட்டலின் பேரில் குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது நேற்றுமுன்தினம் இரவு 4 மணித்தியாலங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களில் 36 பேர் வரையில் கைதுசெய்யப்பட்டனர். அத்துடன் 25.5 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டது.

இதில் சந்தேகத்தின் பேரில் 14 பேரும், நீதிமன்றப் பிடியாணையில் பேரில் 6 பேரும், குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டமைக்காகத் தேடப்பட்டு வந்த 6 பேரும் கைதுசெய்யப்பட்டனர். யாழில் 1.5 லீற்றர் கசிப்பும், கொடிகாமத்தில் 24 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டது.

மேலும், வீதிதடுப்பு காவல் நடவடிக்கையில் மதுபோதையில் வாகனம் செலுத்திய 6 பேரும், சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய 3 பேரும், ஆபத்தான முறையில் வாகனத்தைச் செலுத்திய ஒருவரும் கைதுசெய்யப்பட்டனர். 27 வீதி போக்குவரத்து மீறல் குற்றங்களும் பதியப் பட்டன.

கைதுசெய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணை யின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவிலிருந்து விடுபட இறைவனைப் பிரார்த்திப்போம்

## மன்னார் மறைமாவட்ட ஆயர் கோரிக்கை

மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து விரைவாக விடுபட, நத்தார் காலத்தில் இறைவனை வேண்டுவோம் என மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மன்னார் மறைமாவட்டத்தின் நத்தார் திருவிழா தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் இம்மானு வேல் பெர்னாண்டோ ஆண்டகை ளேும் கூறியுள்ளவை வருமாறு -

இந்த வருடம் நத்தார் திருவிழாவை நாங்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாட வேண்டும்.

எமக்கு மகிழ்ச்சியை கொண்டு வரும் யேசுநாதர் பிறப்பு விழாவை நாங்கள் கொண்டாடுகின்றோம்.

இந்த வருடம் கொவிட் நோய் காரணமாக பலர் துன்பப்படுகின்றனர். தொழில் இல்லாத பிரச்சினை, உணவை பெற்றுக் கொள்ளுவதற்கும் எத்தனையோ தடைகள், கட்டுப்பாட்டுக்குள் உள்ள மக்களும் பல்வேறு விதமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆகையால் நாங்கள் அவர்களையும் நினைத்து இவ்வருடம் வெளி ஆடம்பரங்களைக் குறைத்து, நத்தாரை கொண்டாடுவோம். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கல்யாணமாலை

வட சர்வதேச திருமண சேவை




**மணமகன் விவரம்**

பிறந்த திகதி - 1985.05.29
மதம் - இந்து ஆசாரி
நட்சத்திரம் - சுவாதி
செவ் - 1 இல்
பாவம் - 78
கல்வி - BSC, Q.S Engineering
தொழில் - Engineer
எதிர்பார்ப்பு - Q.S Engineer அல்லது Doctor

**மணமகள் விவரம்**

பிறந்த திகதி - 1985.10.21
மதம் - இந்து ஆசாரி
நட்சத்திரம் - திருவோணம்
பாவம் - 14
செவ் - ------
கல்வி - பட்டதாரி
தொழில் - சுகாதார திணைக்களம்
எதிர்பார்ப்பு - அரச தொழில்.

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528

# CNR world wide Express

International Courier & Cargo Service.

Courier & Cargo

உள்நாடு, வெளிநாடுகளுக்கான அதிவேக, மிதவேக தபால், பொதிகள் பரிமாற்று சேவை.

அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தர வாதம்.

கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்கு பரிமாற்ற சேவை.

வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும்வசதி.

அனுப்பும் பொதிகளை இணைய தளத்தில் கண்காணிக்கும் வசதி.



இல. 401, மணிக்கூட்டு கோபுரவீதி,
(பெருமாள் கோவில் அருகாமை)
யாழ்ப்பாணம்.
Tel - 021 567 4145
Mob - 077 2931062

## குடும்பத்தின் ஒளிவிளக்கு

அப்பா! அப்பா! என்று கதறுகின்றோம் - உங்கள்
செவிதனிற் கேட்கவில்லையா?
பாவிகளாய் இருந்து பரிதவிக்கின்றோம் அப்பா!
ஒரு கூண்டில் வாழ்ந்த எம்மைவிட்டு - எங்கு
தான் சென்றீர்கள் அப்பா!

தலைவனுக்கோர் விழா எடுத்த வேளையில்
தமிழ்க் கொடியவன் தான் - உங்கள் உயிரைப்பறித்தானா?
இல்லை உடலைத்தான் பறித்தான் அப்பா!
நான்கு ரவைகள் தான் - தலையிற்
புகுந்தனவோ அந்த பிஸ்டல் என்னும்
கொடிய நஞ்சு அப்பா!

நான்கு செல்வங்களையும் - உங்கள்
தெய்வத்தையும் தவிக்கவிட்டு சென்றமை ஏனப்பா?
நீங்கள் செல்லவில்லை உங்களைச்
செல்ல வைத்துவிட்டார்கள் தமிழ் அரக்கன்கள் அப்பா!

எந்த விதப் பலனையும் எதிர்பாராமல்
இந்த இனத்துக்காக, தமிழ் மண்ணுக்காக
தமிழ் மொழிக்காக அல்லும் பகலும்
பாடுபட்ட ஒரு தலைவன் நீங்கள் தான் அப்பா!
அஞ்சாத நெஞ்சம், தன்மானம் உள்ளவரும்
எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கு அப்பா!
உப்பைப்போல் எளிமையும் கற்கண்டைப்போல்
இனிமையும் ஆனவர் நீங்கள் அப்பா!

களம் பல கண்டு
சிறை பல சென்று சொல்லெண்ணாத் துன்பம்
அனுபவித்த தியாகி நீங்கள் அப்பா!
பல ஆண்டு காலப் பொது வாழ்விற்கு
சொந்தக்காரர் நீங்கள் அப்பா!

நேற்றுப் பெய்த மழையில் இன்று
முளைத்த காளான்கள் அல்ல
நெருப்பாற்றில் நீந்தி வந்த
மெழுகு வர்த்தித் தீபம் நீங்கள் அப்பா!
நீங்கள் திடீர் அரசியல் வாதியல்ல அப்பா!

தன் குடும்பத்தையும் தன்னையும் கவனியாது
மக்கள் வாழ்வு மலர வேண்டும் - என்பதற்காகத்
தானே பணிகளைச் செய்தீர்கள் அப்பா!
நிராயுத பாணியாய் நின்ற - உங்களைச்
சுட்டது வீரத்தனம் அல்ல இது
கோழைத்தனம் அப்பா! அப்பா!

தன் மானம் இல்லாத தமிழ் அரக்கன்
உங்களைச் சுட்ட அந்தப்பாவி
கடமை முடியவில்லை அப்பா!
காலன் உங்களை அழைத்துவிட்டான் - இல்லைக்
கணக்கை முடித்துவிட்டான் அப்பா! அப்பா!

“தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை
தந்தைசொல் மிக்க மந்திரமில்லை”

“எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய் நன்றி கொன்ற மகற்கு”

தமிழ் வாழ்க

# 21ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்



முன்னாள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ் மாவட்ட செயலாளர் நாயகமும் அனைத்துலக எம்.ஜி.ஆர் பேரவைத் தலைவரும், சமாதான நீதிவானும், (JP) திருமுருகன் களஞ்சிய உரிமையாளரும், முன்னாள் வடபிராந்திய மினிபஸ் சங்கத் தலைவருமாகிய

அமரர்

## உயர்திரு. பொன்னுத்துரை மதிமுகராஜா

திதி சனிக்கிழமை- 26/12/2020

பெற்றோர் மகிழ 24-01-1948

மனைவி மக்கள் கதற 26.12.1998

“நன்மைகள் செய்யத் தாமதம் ஏற்படினும்
அங்கே தீமைகள் நுழைந்துவிடக்கூடாது”
எம்.ஜி.ஆர்.

“கடல் நீர் ஏன் உப்பானது? கடல் கடந்து
வாழ்கின்ற தமிழர்கள் வடிக்கின்ற கண்ணீரால்”
பேரறிஞர் அறிஞர் அண்ணா

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். நிகழ்வின் இடைவேளையில்!
நல்லூரின் வீதியிலே பேசிக்கொண்டிருந்த அப்பாவுக்கு
மாயமாகவே வந்தது எங்கள் குலவிளக்கின் தலையிலே
நாலுரவைகள் துளைத்ததுவே.

பிஸ்டல் என்னும் கொடிய நஞ்சு கருதியிலே தோய்ந்தாரே
எங்கள் இதயக்கனி மறைந்தாரோ?

நல்லவர்கள் வாழ்வதில்லை - இது
நானிலத்தின் தீர்ப்பு

அணைந்துவிட்ட எங்கள் குலவிளக்கை இன்னும் நினைப்போம்
என்று வானத்துச் சந்திரனே இவ் வையகத்தில் உலாவிய எம்
மாசற்ற அப்பாவை எப்போ காண்போம்?

உங்கள் ஆத்மா சாந்தியடைய ஈழ மண்ணிலிருந்து
வணங்குகின்றோம்
உங்கள் பணி தொடரும்.
ஓம். சாந்தி, சாந்தி, சாந்தி
நன்றி, வணக்கம்.

பொன்.மதிமுகராஜா விஜயலக்ஸ்மி (மனைவி)
பொன்.மதிமுகராஜா விஜயகாந்த்
(தலைவர். அனைத்துலக எம்.ஜி.ஆர். பேரவை
சமூக சேவை அமைப்பாளர்,
யாழ்ப்பாணம்,இலங்கை.
ஸ்ரீ முருக பவனம்.
தாவடி வடக்கு,
கொக்குவில்.)

அனைத்துலக சமூக சேவைகள் நற்பணி,
பொதுப்பணி தலைமைச் செயலகம்
கே.கே. எஸ். வீதி, தாவடிச்சந்தி, தாவடி.
யாழ்ப்பாணம்,
இலங்கை.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.12.2020 இல் வெளியிடப்பெற்றது.

# இலங்கைக்கு இரண்டு வென்டிலேட்டர்கள் இஸ்ரேல் அரசாங்கத்தினால் நன்கொடை!



வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே இஸ்ரேல் அரசாங்கத்தால் நன்கொடையாக வழங்கப்பட்ட இரண்டு வென்டிலேட்டர்களை சுகாதார அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் வைத்தியர் எஸ்.எச். முனசிங்கவிடம் வெளிநாட்டு அமைச்சில் வைத்து முறையாகக் கையளித்தார்.

இலங்கைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள புதுடில்லியில் உள்ள இஸ்ரேலியத் தூதரகத்தின் மூலம் இந்த இரண்டு வென்டிலேட்டர்களும் நன்கொடையாக வழங்கப்பட்டன.

2020 டிசெம்பர் 10 ஆம் திகதி நன்கொடையளிக்கப்பட்டமையைத் தொடர்ந்து, புதுடில்லியில் வதியும் இலங்கைக்கான இஸ்ரேலியத் தூதுவர் கலாநிதி ரொன் மல்காவுடனான மெய்நிகர் சந்திப்பின் போது, இலங்கையின் நன்றிகளை வெளியுறவுச் செயலாளர் கொலம்பகே இஸ்ரேல் அரசாங்கத்துக்குத் தெரிவித்தார்.

விவசாயம், தகவல் தொழில்நுட்பம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் திறன் அபிவிருத்தி உள்ளிட்ட பல துறைகளிலான எதிர்கால ஒத்துழைப்புக்கான வழிகள் தொடர்பாகவும் இந்த மெய்நிகர் சந்திப்பின் போது இரு தரப்பினரும் கலந்துரையாடினர்.

பயன்படுத்தப்படவுள்ள இந்த இரண்டு வென்டிலேட்டர்களும், சுகாதாரத் துறைக்கான ஆதரவாகவும், இதன் தேவை அதிகமுடைய தீவிர சிகிச்சைப் பிரிவுகளிலுள்ள பல கொவிட் – 19 நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்கும் பங்களிப்புச் செய்யும்.

கொழும்பில் உள்ள இஸ்ரேலுக்கான துணைத் தூதுவர் விக்கி விக்ரமசிங்க மற்றும் வெளிநாட்டு அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# கிழக்கில் பதிவாகியுள்ளது 4 ஆவது கொரோனா சாவு!

**பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஜீ.சுகுணன் தகவல்**

கிழக்கு மாகாணத்தில் நான்காவது கோவிட் தொற்று மரணம் பதிவாகியுள்ளதாக கல்முனை பிராந்திய சுகாதார பணிமனை பணிப்பாளர் ஜீ.சுகுணன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:–

கடந்த (வியாழக்கிழமை) 54 வயதுடைய அட்டாளைச்சேனை பிரதேசத்தை சேர்ந்த ஒரு பொது மகன் நெஞ்சுவலி காரணமாக அக்கரைப்பற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

அங்கு மேற்கொள்ளப்பட்ட ஈ.சி.ஜி. பரிசோதனையைத் தொடர்ந்து அவருக்கு மாரடைப்பு வந்திருப்பதாக அடையாளப்படுத்தப்பட்டு, அன்டிஜென்ட் பரிசோதனையும் செய்தபொழுது அந்த நபருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருக்கின்றமை உறுதி செய்யப்பட்டது.

அந்த நபர் மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டிருந்தார்.

இவ்வாறு வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்றுக்கொண்டிருந்த அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதனடிப்படையில் கல்முனை பிராந்தியத்தில் இதுவரை நான்காவது கொரோனா மரணம் பதிவு செய்யப்பட்டுள்ளது. – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நெடுந்தீவு மக்களுக்கு வாழ்வாதாரத் திட்டம்!

நெடுந்தீவு, வெட்டக்களிக் குளத்தில் சுமார் 4 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான 11 லட்சத்து ஐம்பதாயிரம் இறால் குஞ்சுகள் விடப்பட்டுள்ளன.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலுக்கு அமைய நீர் வளங்கள் உரப் பயன்பாட்டுக்கு வழியமைத்தல் எனும் கருத்திட்டத்தின் அடிப்படையில் தேசிய நீர் வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையால் நேற்று (வெள்ளிக்கிழமை) இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

வெட்டக்களிக் குளத்தை வாழ்வாதாரமாகக் கொண்டு சுமார் 50 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில், தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள வேலைத் திட்டத்தின் ஊடாக சுமார் ஒரு கோடியே 50 லட்சம் பெறுமதியான, அண்ணளவாக 15 ஆயிரம் கிலோ கிராம் இறால்களை அறுவடை செய்ய முடியும் என்று துறைசார்ந்தோரால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனையில், கடந்த வருடம் வெட்டக்களி குளத்தில் விடப்பட்ட இறால் குஞ்சுகள் பிரதேச மக்களுக்கு நிறைவான பலனைக் கொடுத்திருந்த நிலையில், கடந்த வருட செயற்றிட்டத்தின் தொடர்ச்சியாக, இந்த இறால் குஞ்சுகள் விடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பிரார்த்தனைகளை அதிகப்படுத்துவோம்!

**இம்ரான் மஹ்ரூப் தெரிவிப்பு**

ஜனாஸாக்கள் பலவந்தமாக எரிப்பு, கொரோனா அச்சுறுத்தல், மழை வெள்ள அனர்த்தம் போன்றனவற்றுக்கு முகங்கொடுக்கும் இந்த இக்கட்டான கால கட்டத்தில் நமது பிரார்த்தனைகளை அதிகப்படுத்திக் கொள்வோம் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கடந்த வியாழக்கிழமை விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு –

இலங்கை வாழ் முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரை இது சோதனைகள் மிகுந்த காலகட்டம். நமது நியாயமான கோரிக்கைகள் மறுக்கப்படும் காலகட்டம். உரிமைகள் நசுக்கப்படும் காலகட்டம். இவற்றுக்கு மேலாக கொரோனா, வெள்ளம் போன்ற அச்சுறுத்தல்கள். எனவே, இந்த சோதனைகளில் இருந்து விடுபட நாம் இறைநெருக்கத்தை அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

நாம் விட்ட சில தவறுகள் இந்தச் சோதனைகளுக்கு காரணமாக இருக்கலாம். எனவே, அவற்றுக்காக அடிக்கடி பாவமன்னிப்பு தேடிக்கொள்வோம். நமது கோரிக்கைகளை பிரார்த்தனைகள் ஊடாக இறைவனிடம் ஏத்தி வைப்போம்.

அதேபோல நமது ஜனாஸாக்கள் பலவந்தமாக சாம்பராக்கப்படுவதன் மூலம் நாம் இப்போது அநியாயத்துக்கு இலக்காகி வருகின்றோம். அநியாயம் செய்யப்பட்டோரின் பிரார்த்தனைகள் தடையின்றி ஏற்கப்படும் என அல்லாஹ் குறிப்பிடுகின்றான். ஆகையால் இந்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்வோம்.



முடியுமானவரை தொடர்ந்து பிரார்த்தனைகளில் ஈடுபடுவோம். குனூத் நாஸிலாவை நமது ஐவேளைத் தொழுகைகளில் ஓதிக் கொள்வோம். முடியுமானவர்கள் நோன்பு நோற்று பிரார்த்தனைகளில் ஈடுபடுவோம்.

நமது தேவைகள், கோரிக்கைகளை இறைவனிடம் முன் வைக்க நல்லதொரு சந்தர்ப்பம் இது. இந்தச் சந்தர்ப்பத்தைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்வோம்.

– இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# ஐரோப்பாவில் பரவும் புதிய வகை வைரஸ் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன!

**விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தகவல்**

ஐரோப்பிய நாடுகளில் பரவும் புதிய வகை வைரஸ் தொடர்பில் அந்த நாடுகளிடமும் , உலக சுகாதார ஸ்தாபனத்தினூடாகவும் தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.

இவ்வாறான தகவல்களை மீளாய்வு செய்து இலங்கையில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக சுகாதார தரப்பினருக்கு அறிவிக்கப்படும் என்று பதில் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்–

ஐரோப்பிய நாடுகளில் புதிய வகை வைரஸ் பரவல் ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் நாம் தொடர்ச்சியாக தகவல்களை சேகரித்துக் கொண்டிருக்கின்றோம்.

வைரஸ் பரவுவதாக கூறப்படுகின்ற நாடுகளிடமிருந்தும் குறிப்பாக உலக சுகாதார ஸ்தாபனத்தினூடாகவும் இந்த தகவல்கள் பெறப்படுகின்றன.

இவ்வாறு கிடைக்கப் பெறும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நாட்டில் எவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் சுகாதார தரப்பினருக்கு ஆலோசனைகள் வழங்கப்படும்.

இதன் முதற்கட்ட பாதுகாப்பு நடவடிக்கையாக இங்கிலாந்திலிருந்து இலங்கைக்கு வரும் விமான சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

எதிர்வரும் நாள்களில் காணப்படும் நிலைமை தொடர்பில் ஆராய்ந்த பின்னர் அத்தோடு இந்த வைரஸ் தொடர்பில் விசேட நிபுணர்களின் கருத்துக்கள் என்பவற்றையும் கவனத்தில் கொண்டு விமான சேவை இடை நிறுத்தத்தை தொடர்வதா அல்லது நீக்குவதாக என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும். – என்றார்.

# கொரோனாவிலிருந்து விடுபட இறைவனைப் பிரார்த்திப்போம்

**மன்னார் மறைமாவட்ட ஆயர் கோரிக்கை**

மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து விரைவாக விடுபட, நத்தார் காலத்தில் இறைவனை வேண்டுவோம் என மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்ணாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மன்னார் மறைமாவட்டத்தின் நத்தார் திருவிழா தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மேலும் கூறியுள்ளவை வருமாறு:–

இந்த வருடம் நத்தார் திருவிழாவை நாங்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாட வேண்டும்.

எமக்கு மகிழ்ச்சியை கொண்டு வரும் இயேசுநாதர் பிறப்பு விழாவை நாங்கள் கொண்டாடுகின்றோம்.

இந்த வருடம் கொவிட் நோய் காரணமாக பலர் துன்பப்படுகின்றனர். தொழில் இல்லாத பிரச்சினை, உணவை பெற்றுக் கொள்ளுவதற்கும் எத்தனையோ தடைகள், கட்டுப்பாட்டுக்குள் உள்ள மக்களும் பல்வேறு விதமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.



ஆகையால் நாங்கள் அவர்களையும் நினைத்து இவ்வருடம் வெளி ஆடம்பரங்களைக் குறைத்து, நத்தாரை கொண்டாடுவோம்.– என அவர் குறிப்பிட்டுள்ளார்.